விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

**கல்யாண மாலை**
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 335 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 03 திங்கட்கிழமை (18.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## இன்று பதவியேற்கிறது புதிய அமைச்சரவை

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றியீட்டிய நிலையில், புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கவுள்ளது.

இது குறித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

இன்று காலை 10 மணிக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் குறித்த பதவியேற்பு நிகழ்வு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவையில் 25க்கும் குறைவான அமைச் 15

## கள்வர்களைப் பிடிப்பதாகக் கூறியே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது

### அதனை அவர்கள் நிறைவேற்ற வேண்டும் – ரஞ்சித் மத்தும

(கொழும்பு)



நிறைவேற்று அதிகாரமுடைய மற்றும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடைய ஜனாதிபதி ஒருவர் அங்கம் வகிக்கும் பாராளுமன்றம் உள்ள ஒரு நாட்டில் எதிர்த்தரப்பாகச் செயற்படுவது பாரிய சவாலாகும் எனவும் இச்சவாலை எதிர்கொள்ளத் தாம் தயாராக உள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். 15

## பிரதமராக ஹரிணி

### விஜித ஹேரத்துக்கும் முக்கிய அமைச்சு



விரிவு 3ஆம் பக்கத்தில்

## சர்வஜன வாக்கெடுப்பு மூலம்
# புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படும்

### ரில்வின் சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்புடன் இலங்கையின் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகளும் நிறைவேற்றப்படும் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## ஹெரோயினுடன் இளைஞன் கைது

(கொக்குவில்)

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் புலனாய்வுப்பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் கொக்குவில் பகுதியில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டி 15

## சத்தியலிங்கத்துக்கு எதிராக சிவமோகனால் குற்றப்பத்திரிகை

### தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் சமர்ப்பிப்பு

(வவுனியா)

வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றப் பத்திரிகையின் பிரதியை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் வழங்க முற்பட்ட போது அதனை முன்னாள் எம்.பி சுமந்திரன் வாங்க மறுத்த சம்பவம் வவுனியாவில் இடம்பெற்றது.

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் வவுனியா ஈரப்பெரியகுளத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. 15

## தேசியப்பட்டியல் எம்.பியாக சத்தியலிங்கம் நியமனம்

### தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு முடிவு

(வவுனியா)



தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனத்தை சத்தியலிங்கத்துக்கு வழங்கக் கட்சியின் அரசியல்குழு தீர்மானித்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் வவுனியா 15

### எம்.பியாகிறார் சந்திரசேகரன்

## தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் வெளியீடு

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல்மூலம்பாராளுமன்றம் செல்பவர்களின் பெயர் விபரங்கள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்து வப்படுத்திக் கட்சியின் அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் மற்றும் 15

## பாராளுமன்றக் குழு தலைவராக சிறீதரன்

(வவுனியா)

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவராகச் சிவஞானம் சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் வவுனியா 15

### வரலாற்றில் முதல் தடவையாக

## பார்வையற்றவருக்கு எம்.பி பதவி

### அநுர அரசு அதிரடி



(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் முதல்தடவையாக விழிப்புலனற் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# கிணற்றினுள் வீழ்ந்த சிறுவன் உயிரிழப்பு

வவுனியா கள்ளிக்குளம் பகுதியில் கிணற்றினுள் தவறி விழுந்த சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

நேற்றைய தினம் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் அதே பகுதியைச் சேர்ந்த க.டிலக்சன் என்ற 8 வயதுச் சிறுவனே உயிரிழந்தவராவார்.

குறித்த சிறுவன் கிணற்றிலிருந்து நீரெடுக்க முயன்றபோது தவறி வீழ்ந்துள்ளான்.

இதனையடுத்து உறவினர்கள் அவனை மீட்கும் முயற்சிகளில் ஈடுபட்ட போதும் சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ந-7,250)


# பாராளுமன்றில் 18 வைத்தியர்கள்

நாட்டின் பத்தாவது பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள 225 உறுப்பினர்களில் 18 வைத்தியர்கள் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 16 பேர் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளனர்.

வைத்தியர்களான மொஹமட் ரிஸ்வி சாலி, கிறிசாந்த சில்வா அபேசேன, நிஹால் அபேசிங்க, நளிந்த ஜயதிஸ்ஸ, நிசாந்த சமரவீர, சாலிய சதருவன், ரணசிங்க, ஜகத் விக்கிரமரத்ன, ஜனக சேனாரத்ன, நாமல் சுதர்ஷன, நிஷாந்த ஜகத்குமார, முதித விஜயமுனி, பிரசன்ன குணசேன, மதுர செனவிரத்ன, பி.எச் தம்மிக, ஸ்ரீபவானந்தராஜா ஆகியோர் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட வைத்தியர் இளையதம்பி ஸ்ரீநாத், சுயேட்சை குழு சார்பில் போட்டியிட்ட வைத்தியர் இராமநாதன் அச்சுனா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ந-7)




அமரர் திருமதி இராசம்மா பொன்னுத்துரை

மண்டைதீவு -6

திதி : அபரபக்க திருதியை

ஐயிரண்டு திங்கள் எமை சுமந்து
அங்கமெலாம் நொந்து பெற்றெடுத்து
அன்பால் எமை அணைத்து – உள்ளம்
உவகை கொண்டு உதிரத்தால் பால் ஊட்டி
உணர்வோடு கதை பேசிய அம்மாவே ஒன்றுமே சொல்லாமல்
விண்ணேகி இன்று ஆறு ஆண்டுகள் வந்ததம்மா
ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அம்மா நின்
நினைவோடு எம் உயிருள்ள வரை வாழ்ந்திடுவோம்
தெய்வமே!

(552)

50, சபாபதி வீதி,
தலையாழி, யாழ்ப்பாணம்.

நின் ஆத்மா சாந்திபெற இறையருள்
வேண்டி நிற்கும் : குடும்பத்தினர்

## புதிய...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு புதிய அரசியலமைப்பை பாராளுமன்றத்தில் முன்வைப்பது மாத்திரமன்றி, சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அதனை மக்கள் அனுமதியுடன் நிறைவேற்றுவோம்.

ஆனால், புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பது சவால் மிக்கதொரு பணி என்பது எமக்குத் தெரியும். எனினும் அதனை வெற்றிகரமாகச் செய்து முடிப்போம். அதேபோன்று தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவதில் உறுதியாக உள்ளோம்.

கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எவ்வாறு பயன்படுத்துவது என்பதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எச்சரிக்கையுடன் இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டு முக்கிய நோக்கங்களுக்காகவே ஐரோப்பாவில் அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டன. அதாவது, மக்கள் மீது ஒரு அரசின் அதிகாரத்தை (அரசியலமைப்புக் கட்டுப்பாடுகள்) கட்டுப்படுத்தவும், சமத்துவத்துக்கான முழுமையான உத்தரவாதங்களை வழங்குவதன் மூலம் பெரும்பான்மையினரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கங்களே அவையாகும்.

எவ்வாறாயினும், இலங்கையில் நிறைவேற்றப்பட்ட 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பில் குறிப்பாக ஜனாதிபதி மற்றும் அரச இயந்திரத்தின் தன்னிச்சையான அதிகாரங்களை அதிகரித்ததன் மூலம் நேர்மறையான விடயங்களே இடம்பெற்றுள்ளன.

1972 மற்றும் 1978 அரசியலமைப்புகளில் அமைச்சர்களின் தன்னிச்சையான அதிகாரங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அவை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ந-7)


தயா அச்சகம்

92 (150) நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(மனோகரா தியேட்டர் சந்தி)
NSB வங்கிக்கு அருகில்


அதிபர், ஆசிரியர் அவர்கட்கு

எம்மிடம் தரம் 01 முதல் O/L, A/L வரையான பாடப்பதிவு, பாடக்குறிப்பு, புத்தகங்கள் வெளிவந்து விட்டது.
உடன் பெற்றுக்கொள்ளலாம்.

(2456)

077 396 5214, 077 467 0304


# மரண அறிவித்தல்



மலர்வு 15.04.1944

உதிர்வு 16.11.2024

## Dr. சின்னத்தம்பி பேரின்பநாயகம் (துரை அண்ணா)

**(Retired Registered Medical Officer, Former President Of Chunnakam Lion's Club)**

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் 516, K.K.S வீதியை வசிப்பிடமாகவும் 206/4, பிறவுண் வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பேரின்பநாயகம் அவர்கள் 16.11.2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சுப்பையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரி (Retired Pharmacist, Jaffna Teaching Hospital) அவர்களின் அன்புக் கணவரும் ஜெயநந்தினி(லண்டன்), பிரியதர்சினி(ஆசிரியை - யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ரஜீவ்(சிவபூமி பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகரன்(லண்டன்), வாகீசன் (ஆசிரியர் - யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சஜிகன், துஹிலன், மேகவன், லதுஷியன், மகிபா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி(Teacher), சரஸ்வதி அம்மா (Retired Pharmacist), பாலசுப்பிரமணியம் (Teacher) மற்றும் பரம்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம்(A.O.J Kacheri), தியாகராஜா(Rtd Surveyor) மற்றும் கதிர்காமத்தம்பி(Rtd Engineer Canada), பத்மநாதன் (Vetenery Surgen Canada), காலஞ்சென்ற பரமேஸ்வரி(Life Stock Development) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2024) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 206/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-1608)

தகவல் :
குடும்பத்தினர்
077 378 7294

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் நம்பிக்கையை அநுர அரசு நிறைவேற்றும்

## உறுதிபடத் தெரிவித்தார் இராமலிங்கம் சந்திரசேகரன்



(கொழும்பு)

**தமிழ்த் தலைவர்கள் நீண்டகாலமாக வாக்குறுதிகளை நிறைவேற்றாதிருக்கின்ற நிலையில் அவர்கள் மீதான ஏமாற்றமே வடக்கு, கிழக்கில் எமது வெற்றிக்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.**

தமிழ் மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீதும் தேசிய மக்கள் சக்தியின் மீதும் வைத்திருக்கின்ற நம் பிக்கை குலைக்கப்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட் டார்.

தேசிய மக்கள் சக்தி, வடக்கு, கிழக்கில் பெற்றுள்ள தேர்தல் வெற்றி சம்பந்தமான கருத்துவெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், ஜனாதிபதி தேர்தலின் போது, ரணில் விக்கிரமசிங் கவும் சஜித் பிரேமதாசவும் அவரை ஆதரித்த பரிவாரங்க ளும் எம்மை தமிழ் மக்களின் எதிரிகளாக சித்தரித்து பிர சாரங்களை செய்தார்கள்.

சொற்ப காலமே ஆட்சியில் இருப்பார்கள். வன்முறைகள் தோற்றம் பெறும் என்றும் கூறி னார்கள். இதனால் தமிழ் மக் கள் மத்தியில் எம்மீது சந்தே கங்கள் இருந்தன. இதனால் 25ஆயிரத்துக்கு உட்பட்டதா கவே வாக்குகளை அளித்தார் கள்.

ஆனால் ஜனாதிபதித் தேர் தலின் பின்னரான 45நாட்க ளில் ஜனாதிபதி அநுரகுமார வின் ஆட்சியை மக்கள் நேரடி யாகவே பார்த்தார்கள். எந்த விதமான வன்முறைகளும் இடம்பெறவில்லை. சுமூகமான நிலையில் நாடு செயற்பட்டது.

இதனால் தமிழ் மக்களுக்கு எம்மீதான நம்பிக்கை ஏற்பட் டது. அதுமட்டுமன்றி, எழுபது ஆண்டுகளாக பிரபுத்துவ தமிழ் அரசியல்வாதிகள் பல்வேறு வாக்குறுதிகளை அளித்தார் கள்.

ஆனால் அவர்கள் அளித்த வாக்குறுதிகள் எவற்றையும் நிறைவேற்றவில்லை தமிழ் மக்களுக்கான உரிமைகளை யும் பெற்றுக்கொடுக்கவில்லை. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அன்றாடம் அவர் கள் பல்வேறு நெருக்கடிக ளுக்கு முகங்கொடுக்கின்றார் கள்.

போதைப்பொருள் பாவ னைக்கு இளையோர் அடிமை யாதல் உள்ளிட்ட நெருக்கடிகள் பல உள்ளன. அந்தப்பிரச்சி னைகள் கூட சரியாகக் கையா ளப்படவில்லை.

இதனால் அவர்கள் அரசியல் பிரச்சினைகளுக்கு முன்னதாக தமது அன்றாடப் பிரச்சினைகளை களைவ தற்காக மாற்றத்தை எதிர் பார்த்தார்கள்.

அந்த மாற்றத்துக்காகவே எமக்கு வாக்களித்துள்ளார்கள். நாம் நிச்சயமாக அவர்கள் கொண்டிருக்கின்ற எதிர் பார்ப்பை நிறைவேற்றுவோம்.

ஜனாதிபதி அநுரகுமாரவும் தேசிய மக்கள் சக்தியும் தமிழ் மக்களின் நம்பிக்கையை குலைக்காது பாதுகாக்கும் என அவர் தெரிவித்தார். (நி-8)

## கொழும்பை வந்தடைந்தது 'நாசகாரி'



(கொழும்பு)

அமெரிக்க கடற்படை யின் யுஎஸ்எஸ் மைக் கேல் மர்பி கப்பல், கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த கப்பல் எரிபொருள் நிரப்பும் பயணமாக நேற்று முன் தினம் கொழும்பை வந்தடைந்ததாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலை இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கு அமைவாக வரவேற்ற னர்.

155.2 மீற்றர் நீள முள்ள இந்த ஏவுகணை நாசகாரி கப்பல் 333 பேர் கொண்ட குழுவின ரால் நிர்வகிக்கப்படுகி றது.

இந்தநிலையில், நிரப் புதல் தேவைகளை நிறைவு செய்த பின், யுஎஸ்எஸ் மைக்கேல் மர்பி கொழும்பில் இருந்து புறப்படவுள்ளது. (நி-8)

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீண்டும் இணையுங்கள்

## சஜித்துக்கு ஆஷு மாரசிங்க பகிரங்க அழைப்பு

(கொழும்பு)

சஜித் பிரேமதாச தலை மையிலான ஐக்கிய மக்கள் சக்தியை மீண்டும் ஐக் கிய தேசியக்கட்சியுடன் இணைந்து கொள்ளுமாறு பகிரங்கமான அழைப்பை விடுப்பதாக அக்கட்சி யின் உறுப்பினரான ஆஷு மாரசிங்க பகிரங்கமாக கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் பொதுத்தேர் தல் முடிவுகள் சம்பந்தமாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

பொதுத்தேர்தலின் பின் னரான சூழல்கள் உணரப் பட்டுள்ள நிலையில் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியிடத்தில் பகிரங்கமான கோரிக்கை யொன்றை முன்வைக் கின்றேன்.

ஐக்கிய மக்கள் சக்தி யும் ஐக்கிய தேசியக் கட்சி யும் மீண்டும் இணைந்து செயற்பட வேண்டும்.

யானையை மீண்டும் பலப்படுத்த வேண்டும். இந்த விடயத்தினைக் கோரிய மைக்காக என்னைக் கட்சி யில் இருந்து நீக்குவார்களோ தெரியாது.

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற் படுவது மிகவும் அவசிய மானதொரு விடயமாகும்.


ஐக்கிய மக்கள் சக்தியை இணைப்பது தான் தற்போ துள்ள சவாலான விடய





மாகும். அந்த சவாலை முகங்கொடுப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம் எனத் தெரிவித்தார். (நி-8)

# பிரதமராக மீண்டும் ஹரிணி



(கொழும்பு)

அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசாங்கத்தில் பிரத மராக மீண்டும் ஹரிணி அமரசூரிய பதவியேற் கவுள்ளதாக தகவல் வெளியா கியுள்ளது.

இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத்திற்கு உறுப் பினர்களைத் தெரிவு செய்வ தற்கான பொதுத் தேர்தல் கடந்த 14ஆம் திகதி இடம் பெற்றது.

இந்த தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 6,863,186 வாக்குகளைப் பெற்றுக் கொண்டு புதிய சாதனையை படைத்தது.

இந்நிலையில் தேசிய மக்கள் சக்தி அமைச் சரவையின் அமைச்சர்கள் இன்று பதவியேற்கவுள்ள தாக அரசாங்கத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

இந்த பதவியேற்பு நிகழ் வில் தற்போது பிரதமராக இருக்கும் ஹரிணி அமர சூரிய தேசிய மக்கள் சக்தி யின் புதிய அரசாங்கத்தில் புதிய பிரதமராக பதவி யேற்கவுள்ளார்.

மேலும் விஜித ஹேரத் துக்கு பலம் வாய்ந்த அமைச்சுப் பதவி ஒன்று கிடைக்கப் போவதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது.

பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சுக்களை ஜனாதி பதியின் கீழ் வைத்தி ருக்க ஜனாதிபதி திட்டமிட் டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சர்வதேச கிரிக்கெட்; ஓய்வு பெறுகிறார் டிம் சவுத்தீ

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக நியூஸிலாந்து வேகப் பந்து வீச்சாளர் டிம் சவுத்தீ அறிவித்துள்ளார்.

நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் டிம் சவுத்தீ 35. கடந்த 2008 இல் இங்கிலாந்துக்கு எதிரான நேப்பியர் டெஸ்டில் அறிமுகமானார்.

டெஸ்ட் அரங்கில் அதிக விக்கெட் சாய்த்த நியூசிலாந்து பவுலர்கள் பட்டியலில் ரிச்சர்டு ஹாட்லீக்கு (431 விக்.,) பின் 2 ஆவது இடத்தில் உள்ளார் சவுத்தீ. டெஸ்ட் அரங்கில் 100 அல்லது அதற்கு மேலான போட்டியில் பங்கேற்ற 6 நியூசிலாந்து வீரர்களில் ஒருவராக உள்ளார்.

தவிர டெஸ்டில் 300, ஒருநாள் போட்டியில் 200, சர்வதேச "ரி-20" போட்டியில் 100 விக்கெட் சாய்த்த ஒரே பவுலர் என்ற பெருமை பெற்றுள்ளார். தவிர இவர், மூன்று வித போட்டியிலும் (14 டெஸ்ட், 1 ஒருநாள், 20 சர்வதேச "ரி-20") நியூசிலாந்து



அணியை வழிநடத்தினார்.

இம்மாத இறுதியில் நியூசிலாந்து செல்லும் இங்கிலாந்து அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இத்தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறப் போவதாக டிம் சவுத்தீ தெரிவித்துள்ளார்.

சவுத்தீ கூறுகையில், "நியூசிலாந்துக்காக 18 ஆண்டுகள் விளையாடியது மிகப் பெரிய கௌரவம். ஓய்வு பெற இதுவே சரியான நேரம்," எனத் தெரிவித்தார். (நி-8)

# பயிற்சியின் போது காயம் சுப்மன் கில் விலகல்

அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் வருகிற 22 ஆம் திகதி தொடங்குகிறது. இந்த போட்டிக்கு தயாராகும் பொருட்டு இந்திய வீரர்கள் தங்களுக்குள் இரு அணியாக பிரிந்து பெர்த்தில் உள்ள வாகா மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பயிற்சியின் போது ஸ்லிப்பில் நின்று பீல்டிங் செய்த சுப்மன் கில்லுக்கு இடது கை பெருவிரலில் காயம் ஏற்பட்டு வெளியேறினார். அதன் பிறகு அவர் பயிற்சிக்கு திரும்பவில்லை. அவருக்கு ஸ்கேன் பரிசோதனை செய்ததில் எலும்பு முறிவு ஏற்பட்டு இருப்பது தெரியவந்துள்ளது.

இதனால் அவர் முதல் டெஸ்டில் இருந்து விலகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே முதல் நாள் பயிற்சியின் போது பிரசித் கிருஷ்ணா பந்து வீச்சை எதிர்கொள்கையில் லோகேஷ் ராகுலுக்கு வலது முழங்கையில் பந்து தாக்கியதில் காயம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (நி-8)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3261

**பிரசாந்**


என்னடா பெரிய காதலின் வலி சொல்லுறீங்கள்



காதலிக்கவே ஆள் இல்லை என்கிற வலியை விடவாடா அது பெருசு

**ருக்ஷி**

மனைவி: தூங்கும் போது என் வாய்க்குள்ள ஈ போயிடுச்சுங்க



கணவன்: தூங்கும் போதாவது உன் வாயை கொஞ்சம் மூடக்கூடாதா...

**கனிஸ்**

அப்பா.. இந்த அம்மாவை என்னால சமாளிக்க முடியல



வீட்டுக்கு வரும் போது வேற நல்ல அம்மா வாங்கிட்டு வா

**சந்திரா**

நாம பிறக்கும் போது நமக்கான பிரச்சினைகளும் பிறந்தாச்சு



நாம வளருகிறமோ இல்லையோ நம்ம பிரச்சினைகள் நம்மள விட பெருசா வளர்ந்து நிற்குது

**விபீசாந்**

பொண்ணுக்கு அடிப்படியில சமைக்க வராது... ஆனால் ஒன்லைனில் நல்ல ஓர்டர் பண்ணுவா



**மோனிசா**

பைக்ல நூறு கிலோ மீற்றர் வேகத்தில் போறவன் வீரன் இல்லை



அவன் பின்னாடி உயிர பிடிச்சிட்டு உட்கார்ந்திருக்கிறவன் அவன் தான் வீரன்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் [illegible] facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனையின்றி வாக்களித்த தமிழர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுங்கள்

## சட்டத்தரணி பிரதீபா மஹாநாம

**(கொழும்பு)**

**பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என சட்டத்தரணி பிரதீபா மஹாநாம தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, பொதுத் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி 21 தேர்தல் மாவட்டங்களிலும் அமோக வெற்றிப் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் பாரம்பரியமான அரசியல் கலாசாரத்தில் இருந்து விலகி புதிய அரசியல் கலாசாரத்துக்குள் பிரவேசித்துள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் குறிப்பாக தமிழ் மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள்.

எவ்விதமான அரசியல் கூட்டணியுமில்லாமல் தேசிய மக்கள் சக்தி வெற்றிப் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பொது அரசியல் கட்டமைப்பில் இருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவே கடந்த காலங்களில் சர்வதேச மட்டத்திலும், சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் தொடர்ச்சியாக குறிப்பிட்டது.

இந்த விடயங்களை முன்னிலைப்படுத்தி இலங்கைக்கு எதிரான பிரேரணைகளும் முன்வைக்கப்பட்டன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் குறிப்பாக தமிழ் மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள்.

ஆகவே, பொது அரசியல் கட்டமைப்பில் இருந்து தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்று இனி ஜெனிவாவில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடர் 2025 பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது.

தமிழ் மக்கள் புதிய அரசியல் கட்டமைப்புக்குள் பிரவேசித்துள்ளார்கள், பழைய பாரம்பரியமான அரசியல் கட்டமைப்பைப் புறக்கணித்துள்ளார்கள் என்ற செய்தியை அரசாங்கம் சர்வதேச அரங்கில் எடுத்துரைக்க வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் எவ்விதமான எதிர்பார்ப்பு மற்றும் நிபந்தனைகளின்றி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஆதரவளித்துள்ளார்கள்.

ஆகவே தமிழர்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி நாட்டின் சட்ட கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும்.

அத்துடன் நாட்டில் மனித உரிமையை மென்மேலும் வலுப்படுத்த பாராளுமன்ற பொறிமுறைக்குள் விசேட செயற்றிட்டங்களை வகுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் தேசியத்துடன் பயணிப்பவர்களுடன்

# இணைந்து பணியாற்ற தயார்

### கஜேந்திரகுமார் எம்.பி



(யாழ்ப்பாணம்)

"ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவும் அவர் சார்ந்த தேசிய மக்கள் சக்தியும் ஒரு புதிய அரசமைப்பாக எண்ணியிருக்கின்ற வரைபை நாங்கள் முழுமையாக எதிர்க்கின்றோம்." இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமது கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தேசியம் சார்ந்த அரசியலுக்கும் கொள்கை சார்ந்த தமிழ் மக்களுடைய இருப்பு சார்ந்த விடயங்களுக்கும் எதிர்காலம் மிகவும் சவாலுக்குரிய ஒன்றாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

தேர்தல் முடிவுக்குப் பிற்பாடு கூட ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தங்களது கட்சிக்கு வடக்கில் ஆசனங்கள் கிடைத்துள்ளன எனவும், இனவாதத்தை மக்கள் நிராகரித்துள்ளனர் எனவும் சொல்லியுள்ளார்.

அந்தக் கருத்திலேயே தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய ஆபத்துக்கள் மிகத் தெளிவாக அம்பலமாகியுள்ளன.

தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ் மக்களுடைய உரிமை சார்ந்த நிலைப்பாட்டுக்கு இத்தனை வருடங்களாகத் தமிழ் மக்கள் ஆணை வழங்கி வந்திருக்கின்ற நிலையில் அந்த ஆணையை இனவாதம் என்று சொல்லிக் கொச்சைப்படுத்துகின்ற வகையில் ரில்வின் சில்வா பேசியுள்ளார்.

உண்மையில் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு எதிராகத் தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை எடுத்து வந்திருக்கின்ற நிலையில் அந்தத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை இனவாத நிலைப்பாடாகக் கொச்சைப்படுத்தி இன்றைக்குத் தேர்தல் முறையில் உள்ள ஒரு சில முறைகளால் எண்ணிக்கையில் ஒரு சில ஆசனங்களைப் பெற்றுக் கொண்டதை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை நிராகரிக்கின்றது என்று சொல்கின்ற கருத்துக்கள் எந்தளவுக்கு ஆபத்து என்பதை எமது மக்கள் உணர வேண்டும்.

எதிர்காலத்தில் தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்படுகின்ற சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டித் தீர்வை எட்டுவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கான செயற்பாடுகளை நாங்கள் முன்னெடுக்க இருக்கின்றோம்.

அந்தச் செயற்பாடுகளோடு ஒத்துப் போவதற்குத் தயாராக இருக்கின்ற அனைத்து தரப்புகளோடும் செயற்பட நாங்கள் தயாராகவும் இருக்கின்றோம். விசேடமாக ஒற்றையாட்சி அரசமைப்பின் ஏக்கிய ராஜ்ஜிய என்ற இடைக்கால அறிக்கையை வடக்கு, கிழக்கில் தமிழர் தாயகம் ஏற்றுக்கொள்ளாது என்ற செய்தியை அமைதியான முறையிலும், ஜனநாயக முறையிலும் வெளிப்படுத்துவதற்கும் அதனைத் திணிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் வெளிப்படுத்தி எங்களது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

அந்த நிலைப்பாட்டோடு ஒன்றிணைந்து போவதற்கு இருக்கின்ற அனைத்து தரப்புகளோடும் இணைந்து இந்த விடயங்களைக் கையாளுவதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

இந்த விடயத்தில் எம்மோடு இணைந்து செயற்படுவதற்கு முன்வருமாறு அறை கூவலும் விடுக்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-8-30)

## வைத்தியர் அர்ச்சுனாவுக்கு சாவகச்சேரியில் வரவேற்பு




(சாவகச்சேரி)

2024 பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற வைத்தியர் அர்ச்சுனாவை சாவகச்சேரி மக்கள் வரவேற்றனர்.

தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் முதல் தடவையாக வைத்தியர் அர்ச்சுனா நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் யாழ். சாவகச்சேரி நகருக்கு சென்றிருந்த நிலையில் மக்கள் அவருக்கு அமோக ஆதரவளித்து வரவேற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8-30-33)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615671 9
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

கண்ணீர் அஞ்சலி
எமது பாடசாலையின் தமிழ் பாட ஆசிரியை திருமதி. ஸ்ரீபாமா கஜேந்திரன் அவர்களின் அன்புத்தாயார்
அமரர்.
அந்தோனிப்பிரான்சிஸ் ஆசைப்பிள்ளை

அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.
(550)

## இராசிபலன்

18.11.2024
கார்த்திகை 03, திங்கட்கிழமை
திருதியை முன்னிரவு 10.47 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 7.51 மணிவரை
சுபநேரம் 12:08-1.38 மணிவரை
இராகுகாலம் 7.38-9.08 மணிவரை
சந்திராஷ்டமம்: சுவாதி, விசாகம்

வளவன்

**மேஷம்**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்**: சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வியாபார விருத்தியுண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்**: ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்**: தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சஞ்சலங்கள் சற்று கூடும்.

**சிம்மம்**: இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இயல்பான வழியில் இன்பங்கள் கூடும், போசன சுகமுண்டு.

**கன்னி**: தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்**: தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

**விருச்சிகம்**: மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**தனுசு**: குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களின் சந்திப்பால் பரவ

**மகரம்**: வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்**: புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மீனம்**: புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதார நிலை உயரும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

நல்ல நண்பன் நூறு உறவினர்களுக்கு சமானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தீர்ப்பினை ஏற்றுக்கொள்கிறேன்

## அங்கஜன் இராமநாதன்



(சாவகச்சேரி)

பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பினை ஏற்றுக்கொள்வதோடு பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளின் பின்னராக வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் தனது ஊடக அறிக்கையில், கடந்த காலங்களில் நாம் மக்களுக்காக பொறுப்பெடுத்து மேற்கொண்ட பொறுப்புகளை மக்கள் எம்மிடமிருந்து எடுத்து புதியவர்களின் கைகளுக்கு கொடுத்துள்ளனர்.

இம்முடிவை வழங்கிய மக்களிடம் நாம் எவ்வித வெறுப்புகளும் கொள்ளப்போவதில்லை. பல்வேறு தேவைகளோடு வாழும் மக்கள் அவற்றை தீர்ப்பதற்கான வழியை புதிதான முறையில் தேர்ந்தெடுத்த ஓர் தீர்மானமாகவே கருதுகிறோம்.

நாம் பதவிகளில் இருக்கும் போது எம்மக்களுக்கு உண்மையாகவும் நேர்மையாகவும் மக்களுடைய தேவைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்தோம் என்ற மனத்திருப்தி முழுமையாக உள்ளது.

எதையும் செய்யாது காலத்தைக் கடத்திய அரசியல் வாதியாக நான் இருக்க வில்லை என்பது நிதர்சனமானது. இந்தப் பொறுப்பை மக்கள் இப்போது புதிதாக கையளித்துள்ளவர்களும் சிறப்பாகத் தொடர்வார்கள் என்ற நம்பிக்கையே மக்களிடத்தில் உள்ளது.

இத்தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில், காலங்காலமாக பரம்பரை அரசியல் செய்யும் தேவையும் விருப்பமும் எனக்கில்லை என்பதோடு என்னால் எனது சொந்த விடயங்களை கவனிக்க கிடைத்த சந்தர்ப்பமாகவும் இதனை எடுத்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் மக்களுக்கு என்னால் ஆற்றக்கூடிய சேவைகளை அங்கஜன் இராமநாதன் என்ற தனிநபராக தொடர்ந்தும் மேற்கொள்வேன். தோல்விகளை சந்திக்காதவர்கள் ஒருபோதும் வெற்றியாளராவதில்லை. அதே நேரத்தில் தோற்றாலும் விட்டுச் செல்வதுமில்லை.

இத்தேர்தலில் எம்மீது நம்பிக்கையோடு வாக்களித்த 12,427 யாழ். கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என மேலும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார். (நி-8-30)

# தமிழர் தரப்புக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்-மணிவண்ணன்



(யாழ்ப்பாணம்)

தமிழர் தரப்புக்கள் ஒன்றிணைவதுடன் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ் தரப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் இடது சாரிகளுக்கு என பண்பியல்வு இருக்கிறது. அவர்கள் தமக்கு ஏற்றவாறு சட்டங்களை மாற்றித் தமது ஆட்சியை தக்க வைத்துக்கொண்டிருப்பார்கள்.

இதனை உணர்ந்து கொண்டு தமிழர்தரப்பு ஒற்றுமைப்பட வேண்டும். வடக்கையும் கிழக்கையும் பறிகொடுத்து விட்டு எங்கள் மீது திணிக்கப்படப் போகும் தீர்வுகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படபோகும் என்பதனை உணர்ந்து கொண்டும் உள்ளூராட்சி தேர்தல் மற்றும் மாகாண சபை தேர்தல்களிலும் அவற்றினை தமிழர் தரப்பு பறிகொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இவற்றினை உணர்ந்து தமிழர் தரப்புக்கள் ஒற்றுமைப்பட வேண்டும். இதனை நாம் அழைப்பாக கூட விடுகின்றோம்.

தேர்தலில் தோற்றுப்போனவன் என இதனை பலர் எள்ளி நகையாடலாம். அவ்வாறில்லாமல் தமிழ் தலைமைகள் ஒன்றுபட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுளது. பிளவுபட்ட தமிழர்களாக தொடர்ந்தும் இருக்க வேண்டும் என விரும்பவில்லை.

கூட்டு இப்படித்தான் இருக்க வேண்டும் எனவும் கூறவில்லை. ஆசன மோதல்களை கைவிட்டு தமிழ் தரப்பு ஒன்றிணைய வேண்டும். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து விட்டார்கள் என தமிழ் வாக்காளர்களை மலினப்படுத்த விரும்பவில்லை.

பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

பொதுக்கட்டமைப்பின் உடைவுக்கு பொது அமைப்புக்கள் தான் பொறுப்பேற்க வேண்டும். அவர்கள் தான் உடைத்தார்கள். அதனை தொடர்ந்து கட்சி தலைவர்களின் ஈகோ மற்றும் ஆசன பங்கீடும் காரணமாக அமைந்திருந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-8-33)


## மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும். (நி-1604)

தொடர்புகளுக்கு

076 315 6470



## மணிவிழா வாழ்த்து

திருமதி. தேவகௌரி யோகராஜா

உப அதிபர் SLTS-I, BA, MA (Tamil), PGDE

(30 வருடங்கள்)




சேவை விபரம்

1. யா/சைவத்தமிழ் வித்தியாலயம்
2. யா/ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி
3. யா/சைவசன்மார்க்க வித்தியாலயம்
4. யா/ இராமநாதன் கல்லூரி
5. யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி
6. யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி
7. யா/செங்குந்த இந்துக் கல்லூரி
8. யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
9. யா/செங்குந்த இந்துக் கல்லூரி

எமது பாடசாலையில் அளப்பரிய சேவையாற்றி 18.11.2024 இன்று ஓய்வுபெறும் உபஅதிபர் திருமதி தேவகௌரி யோகராஜா அவர்களை தமது ஓய்வு காலத்தில் சகல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: யா/செங்குந்த இந்துக்கல்லூரி நலன்புரிக்கழகம்

(2598)



## 60 ஆவது அகவையில் மணிவிழா வாழ்த்து



யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் 11 வருடங்கள் தமிழ் பாட ஆசிரியையாகவும் தமது வாழ்வில் 34 ஆண்டுகள் அளப்பரிய கல்விச் சேவையாற்றி 18.11.2024 இல் அகவை 60 இல் ஓய்வு பெறும்

செல்வி. பூதன் ஜெயமலர்

(PGDE, BA (Hons))

அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

சேவை விபரம்

மு/புதுக்குடியிருப்பு ம.வி 15.03.1990–31.12.1992

மு/விசுவமடு ம.வி 01.01.1993 – 31.12.2000

யா/விக்டோரியாக் கல்லூரி 01.01.2001–22.01.2014

யா/சில்லாலை றோ.க பாடசாலை 23.01.2014–05.02.2014

யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி 06.02.2014–17.11.2024

(2631)

வாழ்த்துவோர்-
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவக் கல்லூரியில் தீ! 10 குழந்தைகள் உயிரிழப்பு

● 16 பேர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில்

● உத்தரப் பிரதேசத்தில் சோகம்

(டில்லி)

**உத்தரப்பிரதேசத்தின் ஜான்சியில் உள்ள மகாராணி லட்சுமிபாய் கல்லூரியின் பிறந்த குழந்தைகளுக்கான அவசர சிகிச்சைப் பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். 16 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.**



கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10.45 மணி அளவில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தின் போது பிறந்த குழந்தைகளுக்கான அவசர சிகிச்சைப் பிரிவில் 52 முதல் 54 குழந்தைகள் அனுமதிக்கப்பட்டிருந்ததாக மருத்துவக்கல்லூரிதெரிவித்துள்ளது.

மின்கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது. இருப்பினும், அதற்கான காரணம் என்ன, யாருடைய மெத்தனத்தால் இது நடந்தது என்பதை அறிய விரிவான விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. (நி-8)

## 17 ஆண்டுகளின் பின் நைஜீரியா சென்ற முதல் இந்தியப் பிரதமர்



(டில்லி)

நைஜீரியா ஜனாதிபதி போலா அகமது தினுபு அழைப்பின் பேரில் பிரதமர் நரேந்திர மோடி அந்நாட்டுக்கு அரசு முறை பயணமாக சென்றுள்ளார்.17 ஆண்டுகளுக்குப் பிறகு நைஜீரியா செல்லும் முதல் இந்திய பிரதமர் என்ற பெருமை இவரே.

நைஜீரியா பயணத்தை முடித்துக் கொண்டு பிரேசில் செல்லும் மோடி ரியோ டி ஜெனிரோ நகரில் இன்று ஆரம்பமாகும் ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டில், நீடித்த வளர்ச்சி பொருளாதார ஸ்திரத்தன்மை உள்ளிட்ட சர்வதேச விவகாரங்களில் இந்தியாவின் நிலைப்பாட்டை பிரதமர் மோடி எடுத்துரைக்கவுள்ளார்.

இந்த மாநாட்டுக்கு இடையே, பிரேசில் ஜனாதிபதி உட்பட பல்வேறு உலக தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இது அவரது 3 ஆவது பிரேசில் பயணமாகும். இதற்கு முன்பு 2014 மற்றும் 2019 இல் பிரேசில் சென்று இருந்தார்.அதை தொடர்ந்து, கயானா ஜனாதிபதி முகமது இர்பான் அலியின் அழைப்பை ஏற்று மோடி நாளை 19ஆம் திகதி அந்நாட்டுக்கு செல்கிறார். 20 ஆம் திகதி ஜனாதிபதி இர்பான் அலியை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இதையடுத்து கயானா பாராளுமன்றத்தில் மோடி உரையாற்றுகிறார். அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினர் சந்திப்பு நிகழ்ச்சியிலும் பங்கேற்க உள்ளார்.

கடந்த 1968 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்திய பிரதமர் ஒருவர் கயானாவுக்கு செல்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

## உலகின் மிகப்பெரிய பவளப்பாறை கண்டுபிடிப்பு

உலகின் மிகப்பெரிய பவளப்பாறையை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பசுபிக் கடலின் தென் கிழக்கே சாலமன் தீவுக்கூட்டம் அருகே உள்ள திரி சிஸ்ட்சர் தீவுக் கூட் டத்திற்கு அண்மித்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

34 மீற்றர் அகலம், 32 மீற்றர் நீளம், 5.5 மீற்றர் உயரம் கொண்ட இந்த பவளப்பாறை உலகிலேயே மிகப் பெரிய பவளப்பாறை என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த பவளப்பாறை 300 முதல் 500 ஆண்டுகள் பழைமையானது என்றும், வானில் இருந்து பார்க்கும் போதும் பவளப்பாறை தெரியும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



கடல்வாழ் உயிரினங்களின் வாழ்வில் பவளப்பாறைகள் பெரும் பங்காற்றுகின்றன.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த பவளப்பாறைகள் ஆரோக்கியமான நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ள ஆராய்ச்சியாளர்கள் உலக வெப்பமயமாதல்இந்த பவளப்பாறைக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (நி-8)

## ரஷ்ய-உக்ரைன் போர் அடுத்த ஆண்டு முடிவுக்கு வரும்

### ஜெலன்ஸ்கி நம்பிக்கை



(கீவ்)

ரஷ்யாவுடனான போரை அடுத்த ஆண்டு முடிவுக்குக் கொண்டுவர முயற்சிப்பதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

ராஜதந்திர நடவடிக்கை மூலம் முடிவுக்குக் கொண்டுவர முடியும் என எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வானொலி மூலம் உரை நிகழ்த்திய அவர் ரஷ்யா கைப்பற்றியுள்ள அனைத்து பகுதிகளும் திருப்பப் பெறும் வரை அமைதியை நிலை நாட்ட முடியாது.

ட்ரம்ப் நினைத்தால் போர் விரைவில் முடிவடையும் என்றும், தற்போது உக்ரைனின் கிழக்குப் பகுதியில் நிலைமை மோசமாக இருப்பதாகவும், ரஷ்யா அங்கு முன்னேறி வருவதாகவும் ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

ரஷ்ய போரில் நட்பு நாடுகளைச் சார்ந்திருப்பதைக் குறைக்க சொந்த ஆயுத உற்பத்தியை உக்ரைன் அதிகரித்துள்ளதாகவும், நான்கு வகையான ஏவுகணைகளைத் தயாரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ஸ்பெயினை உலுக்கிய தீ விபத்து முதியோர் இல்லத்தில் 10 பேர் பலி



(ஸ்பெயின்)

ஸ்பெயினின் வடபகுதியில் இருக்கும் முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஒருவர் இக்கட்டான நிலையில் இருப்பதாகவும் சிலர் புகையை சுவாசித்ததற்குச் சிகிச்சையினை நாடுவதாகவும் வட்டார அரசாங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட அனைவரும் இல்லத்தின் குடியிருப்பாளர்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

வில்லாபிராங்கா டெல் எப்ரோ வட்டாரத்திலுள்ள இல்லத்தில் ஸ்பெயினின் நேரப்படி அதிகாலை 5 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சுமார் 35 கிலோமீற்றர் தொலைவிலிருந்து முதியோர் இல்லத்துக்குச் சென்ற தீயணைப்பாளர்கள் நெருப்பை அணைப்பதற்குச் சில மணிநேரம் எடுத்துக் கொண்டனர்.

முதியோர் இல்லத்தில் 82 பேர் வசித்ததாகத் தெரிகிறது. எனினும் எப்படி தீ விபத்து ஏற்பட்டது என்று இதுவரை தெரியவரவில்லை. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-8)

## ஈரானின் அணு ஆயுத தளம் தாக்கி அழித்தது இஸ்ரேல்



(டெஹ்ரான்)

ஈரானில் உள்ள இரகசிய அணு ஆயுத ஆராய்ச்சி தளமானது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் தகர்க்கப்பட்டுள்ளதாக அமெரிக்க உயர்மட்ட அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

குறித்த தாக்குதலானது பார்சின் மிலிட்டரி காம்பிளக்ஸ் அணு ஆயுத ஆராய்ச்சித் தளத் தில் உள்ள டேல்கான் ஆராய்ச்சி கூடத்தில் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, 100 இற்கும் மேற்பட்ட இஸ்ரேலிய F-35 'Adir' ஸ்டெல்த் ஃபைட்டர்கள் விமானங்கள் 2000 கிலோ மீற்றர்கள் பயணித்து ஈரான் வான் பரப்புக்குள் நுழைந்து மூன்று கட்டங்களாக தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எனினும் இந்த தாக்குதலால் தங்களுக்கு அதிக பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை என ஈரான் குறிப் பிட்டுள்ளது.

முன்னதாக தனது அணு ஆயுத ஆராய்ச்சிகளை வெளியுலகில் ஈரான் மறுத்து வந்த நிலையில் இந்த டேல்கான் 2 கூடம் செயற்படாமல் இருந்ததாக கருதப்பட்டது.

கடந்த 2003 ஆம் ஆண்டில் ஈரான் தனது அணு ஆயுத ஆராய்ச்சி திடமான அமாட் நியூக்கிலியர் புரோகிராமில் இந்த டேல்கான் 2 ஒரு அங்கமாக இருந்து வந்தது.

ஆனால் செயலிழந்ததாக நம்பப்பட்ட இந்த டேல்கான் 2 தளத்தில் கடந்த ஆண்டு முதல் மீண்டும் ஈரான் ஆராய்ச்சிகளை தொடங்கியதாக அமெரிக்க மற்றும் இஸ்ரேல் உளவு அமைப்புகள் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில்தான் இந்த தளம் இஸ்ரேல் தாக்குதலில் தகர்க்கப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி-8)

## சட்டமூலத்தை கிழித்தெறிந்த பாராளுமன்ற உறுப்பினர்



(வெலிங்டன்)

நியூசிலாந்து பாராளுமன்றத்தில் மாவோரி பழங்குடியினத்தைச் சேர்ந்த இளம் உறுப்பினரான ஹனா ரவ்ஹிதி கரேரிகிமைபி-கிளார்க், ஹக்கா எனப்படும் பழங்குடி நடனம் ஆடி சர்ச்சைக்குரிய சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு, சட்ட நகலை பாராளுமன்றத்தில் கிழித்த சம்பவம் உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்நிலையில் நியூசிலாந்து அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த வைதாங்கி உடன்படிக்கையின் சில மாற்றங்களை கொண்டு வருவதற்காக நியூசிலாந்து ஆளும் கூட்டணியில் ஏசிடி கட்சி முன்மொழிவை கொண்டு வந்து வாக்கெடுப்பிற்கு அழைப்பு விடுத்தது.

அதன்படி கடந்த வெள்ளிக்கிழமை நியூசிலாந்து பாராளுமன்றத்தில் வைதாங்கி உடன்படிக்கையின் சில மாற்றங்களை கொண்ட வாக்கெடுப்பு நடைபெற்றது. அப்போது, நியூசிலாந்து நாட்டின் பூர்வீக குடிகளான மாவோரி பழங்குடியினத்தைச் சேர்ந்த இளம் உறுப்பினர், ஹக்கா எனப்படும் மாவோரிகளின் நடனம் ஆடி எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

ஹனா-ரவ்ஹிதி கரேரிகிமைபி-கிளார்க் எனும் 22 வயதான இளம் உறுப்பினர் தனது கன்னி உரையின் போதே மாவோரி மொழியில் பேசியது நியூசிலாந்து மட்டுமல்லாது உலக அளவில் கவனத்தை ஈர்த்தது குறிப்பிடத்தக்கது. (நி-8)

## குழந்தைத் திருமணங்களை ஒழிக்கும் சட்டமூலம் கொலம்பியாவில் நிறைவேற்றம்



(கொகொட்ட)

லத்தீன் அமெரிக்க நாடான கொலம்பியாவில் குழந்தைத் திருமணங்களை ஒழிக்கும் முகாந்திரத்தில் புதிய சட்டமூலம் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கொலம்பியாவில் இது வரை பெற்றோர் சம்மதத்துடன் 14 வயதிலிருந்து பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் நடைமுறை இருந்து வருகிறது.


இதற்கு எதிராக கடந்த 2023 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் மசோதா ஒன்று முன்மொழியப்பட்டது.

அவர்கள் சிறுமிகள், மனைவிகள் அல்ல! என்ற முழக்கம் அந்நாட்டில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. இந்நிலையில் இந்தச் சட்டமூலம் மீது தற்போது கொலம்பிய பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்ட நிலையில் அதிக வாக்குகளுடன் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனைப் பாராளுமன்றத்தில் வைத்தே அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் கோலாகலமாக கொண்டாடிய வீடியோ வைரலாகி வருகிறது. கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ இதில் கையை முத்திட்ட பின்னர் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டும். இதன்மூலம் பெண்களின் குறைந்தபட்ச திருமண வயது 18 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அபிவிருத்திக்கு ஆதரவு தெரிவித்த ஈரான்



(கொழும்பு)

இலங்கையின் வெற்றிகரமான பாராளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த இலங்கைக்கான ஈரானிய தூதுவர் டெல்கோஷ்,

இந்தத் தேர்தல் நாட்டின் வலுவான ஜனநாயக மரபுகளுக்குச் சான்றாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

டெல்கோஷ் தனது அறிக்கையில், ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை வலியுறுத்தினார்.

மேலும் புதிய அரசியல் சகாப்தம் முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் ஊக்குவிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் கீழ் பாராளுமன்றங்களுக்கிடையிலான பரிமாற்றங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட இராஜதந்திர உறவுகளுக்கான சாத்தியக்கூறுகளையும் அவர் எடுத்துரைத்தார்.

இலங்கையுடனான தனது பங்காளித்துவத்தை ஆழமாக்குவதற்கும் , நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நல்வாழ்வுக்கு ஆதரவளிப்பதற்கும் ஈரானின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 150 | 250 | 120-150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 250 | 400 | 200-250 | 300 |
| தக்காளி | 300 | 320 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 250 | 100-150 | 150 |
| கோவா | 180 | 180 | 300 | 350 | 300 |
| கரட் | 150 | 200 | 250 | 200 | 300 |
| பூசணி | 100 | 100 | 150 | 100 | 180 |
| புடோல் | 100 | 180 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 130 | 60-80 | 240 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 300 | 250 | 300 | 350 |
| பாகற்காய் | 600 | 550 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 120 | 100 | 100 | 100-150 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 150 | 120 | 200 |
| பயற்றங்காய் | 160 | 150 | 100 | 150 | 250 |
| லீக்ஸ் | 180 | 260 | 220 | 300 | 400 |
| பீற்றூட் | 150 | 150 | 300 | 100 | 300 |
| கறிமிளகாய் | 500 | 600 | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 600 | 150-200 | 400 |
| போஞ்சி | 300 | 550 | 550 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 150 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 150 | 150 | 60-80 | 120 |
| தேசிக்காய் | 400 | 700 | 1000 | 600-700 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-170 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 600 | 1600 |
| வெங்காயப்பூ | -- | 500 | 500 | -- | 500 |
| முள்ளங்கி | 80 | 100 | 200 | 100 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 100 | 100 | 60 |
| ஈரப்பலா | -- | 150 | 100 | -- | 250 |

# இன்று ஒரு தகவல் 265



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## குழந்தையிடம் பேசுவது எப்படி?

என் குழந்தை நான் சொல்வதைக் கேட்பதில்லை என்றால் உங்களுக்கு சரியாகச் சொல்லத்தெரியவில்லை என்று அர்த்தம். அதற்காக குழந்தையைக் குறைசொல்லாதீர்கள். ஒரு குழந்தை நல்ல விதமாக வளர்வது உங்கள் கையிலே தான் உள்ளது.

குழந்தைகள் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் என்ன சொல்கின்றார்கள் தெரியுமா? குழந்தைகளிடம் எப்படிப் பேச வேண்டும் என்பதை விட எப்படி எல்லாம் பேசக் கூடாது என்பதை முதலிலே தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்கின்றார்கள்.

சரி அதை எங்களுக்கும் கொஞ்சம் சொல்லிக் கொடுங்கள். நாங்களும் அதன் பிரகாரம் நடந்து கொள்கின்றோம் என்று சொல்கின்றீர்களா? அப்படி என்றால் இதையெல்லாம் கொஞ்சம் காதிலே வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.

முதலில் உங்கள் குழந்தையை இன்னொரு குழந்தையுடன் ஒப்பிட்டு பார்ப்பதை விட்டுவிடுங்கள். கூடப் பிறந்த குழந்தைகளுடன் கூட ஒப்பிட்டுப் பேசக்கூடாது.

உன் தங்கையைப் பார். அவர் எவ்வளவு நல்லா படிக்கிறார். கணக்கிலே நூறுக்கு நூறு. நீ நூறுக்கு இருபது. இப்படி பேசுவது மிகவும் தவறு. இதனாலே பையனுக்கு ரோசம் வந்து படிக்க ஆரம்பித்து விடுவான் என்று நீங்கள் நினைக்காதீர்கள். ஆனால் அவருக்கு படிக்க வேண்டும் என்கின்ற ரோசம் வராது. தங்கை மேலே கோபம் தான் வரும். தங்கையை வெறுக்க ஆரம்பித்து விடுவான்.

ஒரு ஏழு வயதுப் பையனை ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போகின்றீர்கள். அவன் அங்கே நான்கு வயது பையன் மாதிரி விளையாட ஆரம்பித்து விட்டான். நீங்கள் உடனே வயதுக்கு தகுந்த மாதிரி நடந்து கொள். என்ன இது சின்னக் குழந்தை மாதிரி என்று அதட்டக் கூடாது. பின்பு அவன் உண்மையாகவே நான்கு வயது குழந்தை மாதிரி நடக்க ஆரம்பித்து விடுவான்.

அவனிடம் நாசுக்காக தம்பி சீக்கிரமாக சாப்பிட்டாய் என்றால் வீட்டிற்கு போய் ரீவி பார்க்கலாம். நல்ல நிகழ்ச்சிகள் இருக்கிறது. இப்படி ஏதாவது சொல்லலாம். உங்கள் பையன் தன்னுடைய நண்பர்களுடன் செல்கின்ற போது அவன் உங்கள் விருப்பப்படி உடையணிய வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். உங்கள்கூட வரும் போது என்றால் உங்கள் விருப்பத்தை அவனிடம் சொல்லுங்கள்.

ஒரு குழந்தையை பார்த்து நீ சோம்பேறி என்று சொல்லிவிடக் கூடாது. நீ புத்திசாலி என்றும் அவனுக்கு முத்திரை குத்த ஆரம்பித்துவிடக்கூடாது. அவன் அப்படியே எண்ண ஆரம்பித்து விடுவான்.

நீ மகா புத்திசாலி உனக்கு இந்த பரீட்சை இலகுவாகத் தான் இருக்கும். ஊதித்தள்ளிவிடுவாய். என்று சொல்வதை விட நீ நன்றாக படித்து இருக்கிறாய். நல்ல விதமாக எழுதுவாய் என்று எனக்கு தெரியும் என்று சொல்லலாம். ஒரு வீதியை கடக்கும்போது பையன் குறுக்கே ஓடப்பார்க்கின்றான். உடனே என்ன இது கிறுக்குத்தனமாக ஓடுகின்றாய் என்று அவன்மேலே பாயாதீர்கள். வீதியைக் கடக்கும் போது அப்பா கையைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லுங்கள் அவன் பிடித்துக் கொள்ளட்டும்.

¨very good நல்லா பிடித்துக்கொள். இப்போது நாம் பாதுகாப்பாக வீதியை கடக்கலாம் வா என்று சொல்ல வேண்டும். நீ வந்து எனக்கு குழந்தையாக பிறந்தியே என்று சொல்லி சலித்துக் கொள்ளக் கூடாது. அது குழந்தை மனதிலே பாதிப்பை ஏற்படுத்தும். அதை விட சில சமயம் நீ எனக்கு கோபத்தை உண்டாக்குகின்றாய் கண்ணா என்று சொல்லலாம்.

என்னை கொஞ்சம் தனியாக இருக்க விடு என்று சொல்லி குழந்தையிடம் கத்ஞ்ரீதாதீர்கள். அது தனக்கு யாரும் ஆதரவாக இல்லை என்று நினைக்க ஆரம்பித்து விடும். அதை விட இதோ பாருப்பா உன்னை எனக்கு மிகவும் பிடிக்கும். இப்போது எனக்கு கொஞ்சம் வேலை இருக்கிறது என்று சொல்லலாம். சரி பிறகு அப்பாவிடம் வரலாம் என்று அது புரிந்து கொள்ளும்.

குழந்தையைப் பார்த்து வாயை மூடு என்று கத்தக் கூடாது. தன் கருத்தைப் பற்றி நீங்கள் கவலைப்படவில்லை என்று அவன் நினைத்து விடுவான். குழந்தைகளிடம் போய் இதோ பார்! இதை செய் இல்லை என்றால் என்று அர்த்தமில்லாமல் பயமுறுத்தக் கூடாது. செய்யவில்லை என்றால் நீங்கள் ஏதோ பெரிதாக செய்து விடுவீர்கள் என்று நினைத்து விடுவார்கள்.

சில பேர் குழந்தைகளிடம் இப்போது வரவில்லை என்றால் உன்னை இங்கேயே விட்டு விட்டு போய்விடுவேன். என்று சொல்வது உண்டு. அப்படியும் சொல்லக்கூடாது. இதெல்லாம குழந்தைகள் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் சொல்கின்ற யோசனைகள். அதனாலே ஒரு குழந்தை நன்றாக வளர வேண்டும என்றால் அது பெற்றோர்கள் கையிலே தான் இருக்கின்றது.

ஒரு அப்பா ஒரு சின்னப் பையனை அடித்து விட்டார். ஏன் அடிக்கின்றீர்கள் என்று கேட்டார் அம்மா. பரீட்சையிலே எருமைக்கும் பசுவிற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டிருக்கின்றார்கள். அதற்கு கூட பதில் எழுதத் தெரியவில்லை இவனுக்கு என்றார் அப்பா. அவனுக்கு அந்த வித்தியாசம் தெரியவில்லை. உங்களுக்கு இன்னொரு வித்தியாசம் தெரியவில்லை என்றார் அம்மா. என்ன சொல்கிறாய் என்றார். இது எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதியுயர் அதிகாரத்தை அநுர தரப்பு துஷ்பிரயோகப்படுத்தாது

## மகிந்த தேசப்பிரிய நம்பிக்கை



(கொழும்பு)

எனது காலத்தில் இவ்வாறானதொரு வரலாற்று வெற்றியை ஒரு கட்சி பெற்றுள்ளமை இதுவே முதன்முறையாகும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தேர்தலில் வெற்றிபெறுவோர் வெற்றியைக் கொண்டாடுவதானது தோல்வியடைந்த கட்சிகளின் காயத்தில் உப்பை கொட்டுவதைப் போன்றதாகும்.

அந்தவகையில் இம்முறை வெற்றியடைந்த கட்சி வெற்றியைக்கொண்டாடாமல் இருப்பது வரவேற்கக் கூடிய விடயமாகும்.

1970இல் பாராளுமன்றத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கப்பட்டது. 1977இல் ஆறில் ஐந்து பெரும்பான்மை வழங்கப்பட்டது. அதன் பின்னர் எந்த வொரு தனி கட்சியாலும் இவ்வாறானதொரு வெற்றியை பெற முடியவில்லை.

எனினும் தேசிய மக்கள் சக்தி பெற்றுள்ள அதியுயர் அதிகாரத்தை துஷ்பிரயோகப் படுத்தும் என்று மக்கள் நம்பவில்லை. எனவே இந்த பாராளுமன்றம் முழு இலங்கையர்களினதும் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக செயற்பட வேண்டும்.

அரசாங்கத்துக்குள்ளும் பாராளுமன்றத்திற்குள்ளும் பெரும்பான்மை நிலைப்பாடு என்பதற்கு அப்பால் ஜனநாயகக் கலந்துரையாடல்களின் அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.

பெரும்பாலானவர்கள் வாக்களிப்பை புறக்கணித்தமைக்கு அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளே பொறுப்புக் கூற வேண்டும். தோல்வியடைந்தாலும் மக்களுக்காக சேவையாற்ற வேண்டும் என்பதை இது உணர்த்துகின்றது. எனவே யாரும் யார் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கக் கூடாது. 1977 இலும் பெரும்பான்மையாக புது முகங்களாகவே தெரிவு செய்யப்பட்டனர். எனவே அனுபவம் என்பது பெரிய விடயமல்ல என குறிப்பிட்டார். (நி-8)

# வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கு பிறப்பு சான்றிதழ் தொடர்பான அறிவிப்பு




(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் வசதிக்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களில் இருந்து பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் நகல்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி இதன்முன்னோடி திட்டமாக தெரிவு செய்யப்பட்ட 7 வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரக பொது அலுவலகங்கள் ஊடாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி குவைத், ஜப்பான், கட்டார், அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்ன், கனடாவின் டொரொண்டோ, இத்தாலியின் மிலன் மற்றும் டுபாயில் உள்ள தூதரகத்தின் தூதரகங்கள் மூலம் இந்த முன்னோடி திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது.

இலங்கையில் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு அமைக்கப்பட்ட அமைப்புக்கு ஏற்ப வெளிநாட்டு தூதரகங்கள் மூலம் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களை வழங்குவதற்கு பதிவாளர் பொதுத் துறை மற்றும் வெளியுறவு அமைச்சகத்தால் பராமரிக்கப்படும் தரவு அமைப்பை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (நி-8)

# தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு

(தருமபுரம்)

கிளிநொச்சியின் பல பகுதிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது என பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வினால் விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுப்படுகின்றவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நெருங்கிய உறவு இருப்பதனால் அவர்கள் மீது பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும் பொது மக்கள் சுட்டிக்காட்டியதுடன்

சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்பினை தடுக்கவும் விவசாய நிலங்களை பாதுகாக்கவும் சட்டவிரோத மணல் அகழ்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-8-316)

# கசிப்பு உற்பத்தி நிலையம் யாழில் முற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை தெற்கு, நெல்லியான் பகுதியில் உள்ள கசிப்பு உற்பத்தி செய்யும் இடம் ஒன்று நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது 166 லீற்றர் கள் கோடா, 10.5 லீற்றர் கசிப்பு என்பவற்றுடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய இரண்டு பெரிய கொள்கலன்கள், இரண்டு சிறிய கொள்கலன்கள், இரண்டு செப்பு சுருள் என்பவற்றுடன் 21 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

# இலங்கைத்திருநாட்டின் சமாதானமும் சுபீட்சமும்: இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா ஏற்படுத்தி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோம்

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவில்லை**

**ஞானசம்பந்தர் வாக்கு**

**வரம்பு உயர நீர் உயரும்**
**நீர் உயர நெல் உயரும்**
**நெல் உயர கோன் உயரும்**
**கோன் உயர குடி உயரும்**

**ஔவையார் வாக்கு**

**தலைப்பு இல்லாமல் பேசுதல் பேசுதல்ஆகாது**

**வாரியார் வாக்கு**

**பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நிற்ற வானிலும் நனி சிறந்ததுவே"**

தாயோடு இணைந்து பிறந்த நாட்டுடன் சங்கமித்து வாழும் போது அதுவே உலக வாழ்விலும் பார்க்க அதி விசேஷமாகும் என்பது வசிட்டர் ரிஷி-வாக்கு.

மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு உயிரும் இன்பமாய் வாழ வேண்டும். முடிவில் இறைமையை உணர வேண்டும் இது தான் இறைவனும் எல்லாச் சமயமும் உணர்த்துவதும். இந்தப் பரந்த உலகில் நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் இறைவன் கவனித்து வருகிறார் என்பதை நினைவில் உணர்வோம்.

என்ன கொடுமை இது என்று பரிதாபப்படும் ஏக்க உணர்வு எதிரொலிக்கும் பாடல்

திருமூலம்- 431

**உள்ளத்தொடுவனை உள்ளுறு சோதியை**
**உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை**
**உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்**
**உள்ளம் அவனை உருவறி யாதோ.**

இறைவனின் திருவருளால் மன இருள் அகன்றதும் இதயத்திலே ஞான சூரியன் எழுகிறது. எல்லாமாய் எங்கும் இலங்கும் இறைமைதான், வேறு சமயமாகினும், எம் இதயத்திலும் இயங்குகிறது? என்பதன் உண்மையினை நாம் உணரவேண்டும்.

இருளானது சூரியனைக் கண்டவுடன் அந்தச் சூரிய ஒளியிலே மறைந்து விடுவது போல இலங்கை சகல இன மக்களும், எவ்விட மானாலும் அஞ்ஞான இருட்டை ஒழிந்து எம் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

**இன்று எனக்கு அருளி, இருள் கடிந்து உள்ளத்து எழுகின்ற ஞாயிறு போன்று நின்ற நின் தன்மை நினைப்பு அற நினைந்தேன்.**

மாணிக்கவாசகர்

இருள் சூரியனைக்கண்டவுடன் மறைந்து விடுவது போல் அனைவரது அஞ்ஞான இருட்டை நீக்குவோம் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.


நம்தேசம், நம் இனம், நம் இலங்கை மண் நம் தேசம். அவர் அவரது இறை வழிபாடும் நம் தேசம் மக்கள் அனைவரையும் மதிப்போம்

நம் தேசம் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

"போதும் போதும் நாம் பட்ட துன்பம்
போதும் போதும் நாம் பட்ட இன்னல்கள்
போதும் போதும் இன மத மொழி வேறுபாடு
போதும் போதும் அரசியல் வேறுபாடு பேச்சு

அனைத்துச் சமயங்களும் அன்பு நெறி, அறநெறி இரு நெறிகளையும் காட்டுகின்றன!

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.



**க.கு.க. சிவபாலன் K.K.K**
**தேசபந்து,**
**தேச அபிமானி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 633



கத்தில், கனவிலும் தோன்றியது. விழித்துக் கொண்டிருக்கும் போதும் சில சமயம் அப்படிப் பிரமை உண்டாயிற்று."

அது என்ன வானதி? தண்ணீரில் தங்கள் தம்பியின் முகம் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. என்னை அழைப்பது போலவும் இருந்தது. கனவிலும் இந்தப் பிரமை அடிக்கடி ஏற்பட்டு வந்தது.

நான் இப் படிச் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருக்க மாட்டேன்.

"மனது சொல்வதில் எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை அக்கா! உள் மனத்திலும் நம்பிக்கை இல்லை! வெளி மனத்திலும் நம்பிக்கை இல்லை!"

அது எப்படி நீ மட்டும் அவ்வளவு தீர்மானமாகச் சொல்லுகிறாய்?

"என் உள் மனத்திலும், வெளி மனத்திலும் சில நாளாக ஒரு பிரமை தோன்றிக் கொண்டிருந்தது. தூக்கத்தில், கனவிலும் தோன்றியது.

அதை ஏன் பிரமை என்று சொல்லுகிறாய்? நமக்கு வந்திருக்கும் செய்திக்கும் உன்னுடைய மனத் தோற்றத்துக்கும் பொருத்தமாக இருக்கிறதே?

"இன்னும் முழுவதும் கேட்டால் அது எவ்வளவு பைத்தியக்காரப் பிரமை என்பதை அறிவீர்கள். ஓடையில் மயக்கம் போட்டு விழுந்தேனல்லவா? அப்போது நான் நாகலோகத்துக்கே போய்விட்டேன். அங்கே ஒரு திருமண வைபவம் நடந்தது.

யாருக்கும் யாருக்கும் திருமணம்? அதைச் சொல்ல விருப்பமில்லை, அக்கா! மொத்தத்தில் மனத்தில் தோன்றுவதிலும் கனவில் தோன்றுவதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. கண்ணால் காண்பதையும், காதால் கேட்பதையும்தான் இனிமேல் நம்புவது என்று தீர்மானித்திருக்கிறேன்.

வானதி! நீ சொல்வது முற்றும் தவறு. கண்ணால் காண்பதும், காதினால் கேட்பதும் சில சமயம் பொய்யாக இருக்கும். மனத்திற்குள் தோன்றுவது தான் நிச்சயம் உண்மையாயிருக்கும். கதைகள், காவியங்களிலிருந்து இதற்கு எத்தனையோ உதாரணங்கள் நான் உனக்குச் சொல்லுவேன்.

பிறகு ஒரு சமயம் கேட்டுக் கொள்கிறேன், அக்கா! இப்போது எனக்கு விடை கொடுங்கள்!" என்றாள் வானதி. இளவரசி குந்தவைக்கு ஒரே வியப்பாய்ப் போய்விட்டது இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு தைரியமும், திடீரென்று எப்படி ஏற்பட்டன என்று ஆச்சரியப்பட்டாள்.

"வானதி! இது என்ன அவசரம்? அப்படியே நீ கட்டாயம் ஊருக்குப் போக வேண்டுமென்றாலும், சில நாள் கழித்துப் புறப்படக் கூடாதா? இப்போது நாடெங்கும் ஒரே குழப்பமாய் இருக்குமே? உன்னைத் தக்க பாதுகாப்புடன் அனுப்பி வைக்க வேண்டாமா?"

"எனக்கு என்ன பயம், அக்கா! கொடும்பாளூரிலிருந்து என்னை அழைத்து வந்த பல்லக்குத் தூக்கிகளும் காவல் வீரர் நால்வரும் ஒரு வேலையுமின்றி இத்தனை காலம் இங்கே தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களே என்னைத் திரும்ப அழைத்துக் கொண்டு போய்விடுவார்கள். அழகாயிருக்கிறது! உன்னை அப்படி நான் அனுப்பி விடுவேன் என்றா நினைக்கிறாய்.

"உங்களை நான் ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன் அக்கா! எனக்குப் பயம் ஒன்றுமில்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நான் கத்தவே இல்லை



கண்ணுசாமி, பில்லாகுடி என்ற சிறிய கிராமத்தில் வசித்து வந்தான். மகா கஞ்சன். ஒரு நாள், விமான நிலையத்தைப் பார்ப்பதற்காக தன் மனைவியோடு வந்திருந்தான். விமானம் மேலே கிளம்புவதையும் வானில் வட்டமிடுவதையும், கீழே இறங்குவதையும், இருவரும் ஆர்வத்துடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர்களின் ஆர்வத்தைப் பார்த்த அங்கிருந்த விமானி ஒருவர் நீங்கள் இருவரும் வாருங்கள் இந்த விமானத்தில் ஏறி வானத்தில் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வரலாம். ஆளுக்கு நூறு ரூபாய் தான்! என்றார்.

கஞ்சனுக்கு ஆர்வம் தான். இதற்காகவா இருநூறு ரூபாய் வீண் செலவு செய்வது என்று நினைத்து நாங்கள் வரவில்லை என்றான்.

எப்படியும் அவர்களிடம் பணம் பெற நினைத்த விமானி நீங்கள் பணம் தர வேண்டாம். எந்தக் கட்டணமும் இல்லாமல், உங்களை இலவசமாகவே விமானத்தில் ஏற்றிச் செல்கிறேன். வானத்தில் விமானம் பறக்கும்போது என்ன நடந்தாலும் நீங்கள் சிறு சத்தம் கூடப் போடக் கூடாது. அப்படி சத்தம் போட்டு விட்டால், கட்டணமாகிய இருநூறு ரூபாயை நீங்கள் கொடுத்துவிட வேண்டும். சம்மதம் தானே? என்றார்.

சம்மதம்! என்றான் கஞ்சன். தன் மனைவியுடன், விமானத்தில் ஏறி அமர்ந்தான் விமானம் பறக்கத் தொடங்கியது.

வானத்தில் விமானம் குட்டிக்கரணம் போட்டது. தலை கீழாகப் பறந்தது. சீறிப் பாய்ந்தது. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருந்த கஞ்சன் சிறு [illegible] வில்லை. வேறு வழியின்றி விமானத்தைத் தரை இறக்கினார் விமானி.

கஞ்சனின் கையைக் குலுக்கி ஆமாம் பயமுறுத்தும் விமான விளையாட்டுகளை நான் வானத்தில் செய்யும்போது, இதுவரை எனக்குத் தெரிந்து சிறு ஓசைகூட எழுப்பாது இருந்தீர்கள்! என் பாராட்டுக்கள். எப்படி இது உங்களால் முடிந்தது?" என்று கேட்டார் விமானி.

நான் கூட ஒரே ஒரு சமயம், என்னை அறியாமல் கத்த இருந்தேன். எப்படியோ முயன்று அடக்கிக் கொண்டேன்!" என்றான் கஞ்சன்.

எப்போது? என்று கேட்டார் விமானி. என் மனைவி, விமானத்தில் இருந்து தவறிக் கீழே விழுந்த போது!" என்றான் கஞ்சன்.

மயங்கி விழுந்தார் விமானி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உங்களின் உறுதி மற்றும் நம்பகத்தன்மை இயற்கையாகவே உங்கள் மீதான நம்பிக்கையை வளர்க்கும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கு மக்களின் வாக்களிப்பை ஒப்பிட்டுக் குறைகூறாதீர்கள்

வடபகுதித் தமிழ் மக்கள் அரசியல் தொடர்பில் ஆழ்ந்து சிந்திப்பவர்கள். அவர்களின் சிந்தனையை யாரேனும் சிறுமையின் பாற்பட்டு பார்ப்பாராயின், வடபகுதித் தமிழ் மக்களின் ஆற்றலைப் புரியாமல் கருத்துரைப்பர்.

ஆம், யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பை சிலர் விமர்சிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்துடன் ஒப்பிட்டுக் கருத்துரைக்கின்றனர். இஃது உண்மையில் வேதனைக்குரிய விடயம்.

மாறாக, எத்தனையோ ஆண்டுகளாக தமிழ் அரசியல் கட்சிகளுக்கு நம் மக்கள் வாக்களித்துக் கண்ட பலன் என்னவெனில் எதுவுமில்லை.

தமிழ் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் பல்வேறு நெருக்கடிகளையும் பொருளாதாரச் சிக்கல்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆம், ஒரு பரப்பேனும் சொந்த நிலம் இல்லாததால், அரச வீட்டுத் திட்டத்தைப் பெற முடியாமல்போன தமிழ்க் குடும்பங்கள் எத்தனை.

அரச அதிகாரிகளின் அசமந்தமும் உத்தியோகத்தர்களின் பழிதீர்த்தலாலும் அரச நிவாரணத்தை இழந்தவர்கள் எத்தனை.

இருந்தும் இவைபற்றி எங்கள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாரேனும் கதைத்தார்களா? நிலமற்றவர்களுக்கு அரச காணிகளை வழங்குவதிலேனும் கவனம் செலுத்தினார்களா? இல்லவே இல்லை.

சரி, பரவாயில்லை. முதலில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலேயே நாம் கவனம் செலுத்த வேண்டும் என்றார் இரா. சம்பந்தர். அவ்வாறு கூறியவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக தமிழ் இனத்தின் உரிமையை ஏலமிட்டார்.

மகிந்த தரப்புடன் மறைமுகமாக ஒன்றிணைந்து செயலாற்றிய இரா.சம்பந்தர் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் நிபந்தனைகளுக்குக் கால அவகாசம் கொடுப்பதில் முன்னின்றார். எனினும் அதனைக் கிழக்கு மக்கள் புரிந்து கொள்ளவில்லை.

இப்போதுகூட மட்டக்களப்பில் தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்காலச் செயலாக்கம் பற்றி மட்டக்களப்பு மக்கள் கவனிக்கத் தவறியது வருந்துதற்குரியது.

இல்லை. அவர்கள் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தையே முதன்மைப்படுத்தி நின்றனர் என்று யாரேனும் வாதிட்டால், அதற்கு நாம் எதிர்ப்பில்லை.

அப்படியானால், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராக அரியநேத்திரன் போட்டியிட்டபோது, அவரை வடபகுதித் தமிழ் மக்களில் கணிசமானவர்கள் ஆதரித்தனர். ஆனால் மட்டக்களப்பு மக்கள் அரியநேத்திரனை ஆதரிக்கத் தயங்கியது ஏன் என்ற கேள்வி எழவே செய்யும்.

ஆக, தமிழ்ப் பிரதிநிதித்துவம் மட்டுமே எங்கள் இனத்துக்கு வலிமை சேர்க்கும் என்று நினைப்பது இப்போது அர்த்தமற்றுப் போயிற்று.

இதை நாம் கூறுவதற்காக, தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு எதிரான கருத்து என்று எவரும் நினைத்துவிடாதீர்கள்.

ஆம், எங்கள் தமிழ்க் கட்சிகளுக்காக எங்கள் மக்கள் எத்தனை தடவைகள் வாக்களித்தனர். வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்த போது, கால் ஊனமுற்ற ஒருவர் தவழ்ந்து சென்று வாக்களித்த அந்தக் காட்சி இன்னமும் எம் ஆழ்மனதில் அப்படியே உள்ளது.

ஆனால் அந்த வடக்கு மாகாண ஆட்சி எப்படி நடந்தது. வடக்கு மாகாண சபையை யார் குழப்பினார்கள். சிங்களவர்களா? அல்லது நம்மவர்களா?.

இந்த அனுபவங்கள் நிறையப் பெற்ற வடக்குத் தமிழ் மக்களின் வாக்களிப்பை ஒருபோதும் ஒப்பிட்டுக் குறை காணாதீர்கள். அது நீதியன்று.

# மனித உடற் கழிவுகளை குளத்தினுள் கொட்ட முனைந்தவரால் பரபரப்பு

## வவுனியா தாண்டிக்குளத்தில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா தாண்டிக் குளத்தில் மனித உடற் கழிவுகளை வீசுவதற்கு வந்த நபர் ஒருவர் இளைஞர்களால் மடக்கிப்பிடிக்கப் பட்டு நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

நேற்று முன்தினம் மாலை நபர் ஒருவர் துவிச்சக்கரவண்டி ஒன்றில் மலர்ச்சாலையில் சடலங்களில் இருந்து அகற்றப்படும் கழிவுப்பொதியுடன் தாண்டிக் குளம் குளத்துப் பகுதிக்கு சென்றுள்ளார்.

இதனைத்தொடர்ச்சியாக அவதானித்து வந்த இளைஞர்கள் சிலர் அவரை மடக்கிப்பிடித்து நையப்புடைத்ததுடன், அந்தப் பகுதி கமக்காரர் அமைப்பிற்கு தகவல் வழங்கியிருந்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற கமக்காரர் அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் அது தொடர்பாக வவுனியா பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவிற்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்து வாகனத்தில் ஏற்றி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல முனைந்தனர்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த பொதுமக்கள் மலர்ச்சாலையின் உரிமையாளர் வரும் வரையில் வாகனத்தை நகரவிடமாட்டோம் என போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் குறித்த பகுதியில் குழப்பநிலை ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறித்த சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணை செய்து குற்றவாளியை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதாகப் பொதுமக்களுக்கு உறுதியளித்தார்.

இதனையடுத்து பொது மக்கள் அந்தப் பகுதியில் இருந்து அகன்று சென்றனர்.

இதேவேளை குறித்த கழிவுகளை வவுனியா கண்டி வீதிக்கு அண்மையில் உள்ள மலர்ச்சாலை ஒன்றில் இருந்தே எடுத்து வந்ததாக அதனைக் கொண்டு வந்த நபர் பொதுமக்களுக்குத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட நபர் அவர் கொண்டுவந்த கழிவுப் பொதிகளுடன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். (ந-7)

### மன்னார் – பெரிய மடு

## இராணுவ முகாமில் மர்மக் காய்ச்சல்

(மன்னார்)

மன்னார் - யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள விடத்தல் தீவு - பெரியமடு இராணுவ பயிற்சி முகாமில் மர்மக் காய்ச்சல் மற்றும் சுவாசக் கோளாறுகள் காரணமாக 500 இற்கும் அதிகமான படையினர் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதோடு சிலர் வைத்தியசாலைகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்துத் தெரிய வருவதாவது, மன்னார் விடத்தல் தீவு - பெரியமடு பகுதியில் உள்ள இராணுவப் பயிற்சி முகாமில் காய்ச்சல் மற்றும் சுவாசக் கோளாறு காரணமாகப் பாதிக்கப்பட்ட சிப்பாய் ஒருவர் அங்கொடை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம் குறித்த இராணுவப் பயிற்சி பாடசாலையில் காய்ச்சல் மற்றும் சுவாசக் கோளாறு காரணமாகப் பாதிக்கப்பட்ட சிலர் மன்னார் மற்றும் பொலநறுவை வைத்திய சாலைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

அங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள குறித்த சிப்பாய்க்கு ஏற்பட்டுள்ள நோய் நிலைமை மூளைக் காய்ச்சலாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப் பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த இராணுவப் பயிற்சி முகாமில் பரவி வரும் மோசமான சுகாதார நிலைமையைக் கருத்திற் கொண்டு அங்குள்ளவர்களைத் தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விடத்தல் தீவு - பெரிய மடு பகுதியில் உள்ள இராணுவ பயிற்சி முகாமில் தற்போது 509 பேர் பயிற்சி பெற்று வருகின்ற நிலையில் அவர்கள் குறித்த முகாமிற்குள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர். (ந-7)

### வடமாகாண மரநடுகை மாதம்
### கார்த்திகை 01 - 30, 2024

**"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப் பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக்காப்பாற்ற முடியவில்லை"**

[illegible]

## ஐ.எம்.எப் பிரதிநிதிகள் இலங்கை வருகை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதிநிதிகள் குழுவொன்று, விரிவாக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான மூன்றாவது மீளாய்வுக்காக நேற்று (17) இலங்கை வந்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் நான்கு வருட நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் இலங்கைக்குக் கிடைக்கப்பெறும் மொத்தக் கடன் தொகை 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

ஒவ்வொரு கடன் தவணையின் பின்னரும் முன்னேற்றம் பற்றிய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்கமைவாக சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட பணித் தலைவர் பீட்டர் ப்ரூவர் தலைமையிலான பிரதிநிதிகள் குழு மூன்றாவது மீளாய்வுக்காக நேற்று இலங்கையை வந்தடைந்தனர்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவது மற்றும் நாட்டின் பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளது.

புதிய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-7)

## நுகர்வோர் அதிகார சபையின் விசாரணைப் பிரிவு கலைப்பு

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் விசாரணைப் பிரிவின் தலைவர் நீக்கப்பட்டு, குறித்த பிரிவு கலைக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கம் நுகர்வோர் விவகார அதிகார சபையில் சட்டத்திற்கு முரணான வகையில் விசாரணைப் பிரிவின் தலைவர் ஒருவரை நியமித்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, அந்தப் பிரிவு கலைக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நிதியமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின்றியே குறித்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

குறித்த நியமனம் தொடர்பில், நுகர்வோர் அதிகார சபையின் தற்போதைய தலைவர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கேட்டபோது, அவ்வாறான நியமனத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது.

அத்துடன், நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு நியமிக்கப்பட்ட ஊடக அதிகாரியும் தற்போதைய தலைவரால் நீக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் வர்த்தக அமைச்சர் தன்னிச்சையாக இந்த நியமனத்தை வழங்கியுள்ளமை உறுதியாகியுள்ளது.

அதற்கமைய, குறித்த நியமனம் தொடர்பில் தற்போதைய தலைவர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை நிலையங்களுக்குள்
# அலைபேசி கொண்டு செல்ல கண்காணிப்பாளர்களுக்கு தடை

(கொழும்பு)

இம்முறை கல்விப் பொது தராதர உயர்தர பரீட்சை நடைபெறும் நிலையங்களுக்குள், உதவி அதிபர் உட்பட கண்காணிப்பு ஆசிரியர்கள் அலைபேசிகளை எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள் ளது.

பரீட்சை மையத்தின் நிலைய அதிகாரி மற்றும் மேலதிக கண்காணிப்பாளர் மட்டுமே அலைபேசிகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

கடந்த காலங்களில் எழுந்த பிரச்சினைகள் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.மேலும், பரீட்சை காலத்தில் தேர்வு கண்காணிப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, பரீட்சை திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக, மாகாண மற்றும் பிராந்திய அலுவலகங்களின் அதிகாரிகளும் கண்காணிப்புக்கு ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

ஒரு கண்காணிப்பாளர் 15 நாட்களில் 20 பரீட்சை மையங்களைக் கண்காணிக்க வேண்டும். என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# தேசியப்பட்டியல் மூலம்
## பாராளுமன்றம் செல்கிறார் திலித்



(கொழும்பு)

சர்வஜன அதிகாரம் கட்சிக்கு கிடைக்கப் பெற்ற தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவிக்கு கட்சியின் தலைவர் தொழிலதிபர் திலித் ஜயவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனை சர்வஜன அதிகார உயர்பீடக் குழு தீர்மானித்துள்ளதுடன், அது தொடர்பான தீர்மானத்தை தேர்தல் ஆணைக்குழுவிற்கு நேற்று அறிவித்துள்ளது. (நி-8)

# இன ஐக்கியத்துடன் நாட்டை கட்டியெழுப்புவோம்
## இளங்குமரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

எமக்கு கிடைத்த இந்த வெற்றி மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும். புலம்பெயர் தேசத்தில் இருக்கின்ற உறவுகள் ஒன்றிணைந்து எமது நாட்டினை முன்னேற்றுவதற்கு முன்வர வேண்டும்.

என தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமக்குக் கிடைத்த வெற்றி என்பது மக்களுக்கு கிடைத்த பெரிய ஒரு வெற்றியாகவே கருதப்பட வேண்டும்.

ஏனென்றால் இதுவரை காலமும் இருந்த அரசியல்வாதிகள் மீது மக்களுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பினாலும், அவர்களது பொறுப்பற்ற செயற்பாடுகளினாலும் அரசு நிறுவனங்களை வினைத்திறமின்மை காரணமாக இயக்கியதன் காரணமாகவும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த நாட்டில் ஒரு இன ஐக்கியத்தை ஏற்படுத்துவார்.

என்ற நம்பிக்கையுடனும் மக்கள் இந்த வாக்குகளை பதிவு செய்துள்ளார்கள்.

இந்தத் தேர்தலில் எமக்கு பல தொழிற்சங்கங்கள் உதவி செய்திருக்கின்றன.

அந்த தொழிற்சங்கங்களுக்கும் மக்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டு இருக்கின்றோம். புதிய ஒரு யுகத்தை படைத்து, வளமான ஒரு சூழலை உருவாக்கி, தொழிற்துறையை உருவாக்கி யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டத்தை அபிவிருத்தி செய்து இளைஞர்களிடம் கையளிப்போம். இதற்கு புலம்பெயர் தேசத் தில் இருக்கின்றவர்கள் உதவி செய்வதற்கு முன் வர வேண்டும். இன்று வெளிநாட்டு உதவி இல்லாத யாழ்ப்பாணம் என்பது பூஜ்ஜியமாக காணப்படுகிறது. வெளிநாட்டு உதவிகளின் நிமித்தம்தான் பலர் இயங்கிக் கொண்டிருக் கின்றார்கள்.

அந்தவகையில் தொழிற்சாலைகளை நிறுவி, வடக்கு கிழக்கில் தமிழ் மொழிக்கு முன்னிலை கொடுத்து, நாங்கள் ஒரு இன ஐக்கியத்துடன் நாட்டை கட்டி எழுப்ப அனைத்து தரப்பினரும் முன் வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# கொய்யாப்பழம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical name- Psidium guajava**
**Family- Myrtaceae**
**Engl-guava**



சிறுமரவகையைச் சேர்ந்தது. இதன் தாயகம் மெக்சிக்கோ, மத்திய அமெரிக்காவாக இருந்தாலும் இலங்கையில் நன்கு வளரக்கூடியது , பயிர்ச் சாகுபடியும் அதிகமாக உள்ளது. கொய்யாப்பழ இனங்களுள் இரண்டு முக்கியமானவை.

பழத்தின் உட்பக்கம் சிவப்பாக உள்ளதும், வெள்ளையாக உள்ளதுமான இரண்டு வகையாகும். இரண்டிலும் சத்துக்கள் தாராளமாக இருந்தாலும் சிவப்பு இனத்தில் இருக்கும் முக்கிய இரண்டு வேதியற் சத்துக்களால் சிவப்பு வகை மருத்துவ குணங்கள் அதிகமாக உள்ளதாகும். 100 கிராம் பழத்தில் 37 கலோரிகள் உண்டு.

பழுத்த கொய்யாப் பழத்தில் உயிர்ச்சத்து C அதிகமாக உள்ளது. அதைவிட நார்ச்சத்து, பொஸ்பரஸ், இரும்புச் சத்து, கல்சியம், கந்தகச்சத்து, சோடியம், மகனீசியம் உயிர்ச்சத்து B என்பன காணப்படுகின்றது.

இதைவிட Antioxidants சத்துக்களும் காணப்படுகின்றது. அதிகளவான உயிர்ச்சத்து C காணப்டுவது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

மேலதிகமாக கொய்யாப் பழத்தில் உயிர்ச்சத்து E, உயிர்ச்சத்து B யில் B 1 B 2, B 3, B 5, B 6 காணப்படுகின்றது. கொய்யாப்பழத்தில் அதிகளவான உயிர்ச்சத்துக்கள், தாதுச் சத்துக்கள் காணப்படுவதால் Power house of nutrients என அழைக்கப்படுவதுடன் Poor man's apple எனவும் அழைக்கப்படுகின்றது.

மற்றைய பழங்களுடன் ஒப்பிடும்போது கொய்யப்பழத்தில் 100 கிராம் பழத்தில் 8.92 கிராம் சீனிச்சத்து காணப்படுகின்றது.

அதாவது சர்க்கரை உயர்த்தும் திறன் குறைவாக உள்ளது. எனவே நீரிழிவு நோயாளிகள் தினம் ஒரு சிவப்பு நிறக் கொய்யா சாப்பிடலாம்.

இல்லாவிட்டால் வெள்ளை நிறமும் பயன்படுத்தலாம். எப்போதும் கொய்யாப்பழத்தை சாப்பிடும் போது விதைகளுடன் சேர்த்துச் சாப்பிட வேண்டும்.

சிவப்பு பழத்தில் Polyphenol, Carotenoid எனும் உடம்பிற்கு தேவையான இரண்டு இரசாயனச் சத்துக்கள் உண்டு. கொய்யாப் பழத்தின் விதைகளிலிருந்து தயாரிக்கப்டும் எண்ணெய் அழகு சாதன கிறீம்கள் தயாரிக்க பயன்படுத்தப்படுகின்றது.

அதுவும் முகத்தில் பூசும் கிறீம்களில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இதன் விதைகளில் உயிர்ச்சத்து C, A, லினோலிக் அமிலம் போன்றவை காணப்படுகிறது.

கொய்யாப்பழத்தில் இருக்கும் பொற்றாசியம் சத்தானது இரத்த அழுத்தத்தை சீராக வைத்திருக்க உதவும். கொய்யாப்பழத்தை சாப்பிடும் போது கெட்ட கொலஸ்ரோலை குறைத்து நல்ல கொலஸ்ரோலை அதிகப்படுத்துகிறது.



எல்லா விதத்திலும் இதயத்தின் இயக்கத்தை சீராக வைத்திருக்க உதவுகிறது.

அத்துடன் மலச்சிக்கல் இருப்பவர்களும் இக் கொய்யாப்பழத்தை சாப்பிடலாம். கொய்யாப்பழத்தில் இருக்கும் பெக்ரின் எனும் நார்ச்சத்து மலச்சிக்கல் ஏற்படாமல் மலத்தை வெளியேற்ற உதவுகிறது.

அத்துடன் செரிமான மண்டலத்தை சீராக வைத்திருப்பதற்கும் உதவுகிறது. குறைந்த கலோரி உடைய பழமாக இருப்பதால் தினமும் ஒரு பழம் சாப்பிட்டால் வயிறு நிறைந்த உணர்வு ஏற்படும். மேலதிகமாக உணவு எடுத்தலும் தடுக்கப்படும்.

குடலில் நல்ல பக்றீரியாக்களையும் பெருக்கக் கூடியதாக இருப்பதால் செரிமான மண்டலம் சீராக தொழிற்படும்.

கொய்யாப்பழத்தில் மிக அதிகளவு உயிர்ச்சத்து C காணப்படுவதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகி நோய்களின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கக் கூடியதாக இருக்கும்.

சளிப் பிரச்சினை உள்ளவர்களும் சாப்பிடலாம். சளிப்பிடிக்காமலும் தடுக்கும், அத்துடன் சளிப்பிடித்தவர்களுக்கு சீக்கிரம் சளி சுகமாகவும் உதவும்.

கிட்டத்தட்ட ஒரு கொய்யாப் பழத்தை சாப்பிடும் போது 3 நாட்களுக்கு தேவையான உயிர்ச்சத்து C எமது உடலிற்கு கிடைக்கிறது. எனவே நோய்வராமலும் தடுக்கும், நோய் வந்தவர்களுக்கு சீக்கிரம் நோய் குணமாக உதவும். குறைந்த கலோரியை கொய்யாப்பழம் கொண்டிருப்பதால் உடல் எடையை குறைக்க நினைப்பவர்கள் கொய்யாப் பழத்தை தினமும் அவர்கள் உணவுப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

பொதுவாக 3,4 வகையான பழங்கள் சாப்பிட்டு கிடைக்கக் கூடிய ஊட்டச் சத்தானது ஒரு கொய்யாப்பழத்தைசாப்பிட்டால் கிடைக்கும் என்பது அதிசயமான உண்மை. அவ்வளவு மருத்துவக்குணங்கள் நிறைந்தது. கொய்யாப்பழம் தினம் ஒன்று சாப்பிட்டுவரும் போது குருதிச்சோகை நோய் ஏற்படாமல் தடுக்கக் கூடியதாக இருக்கும். இரவில் கொய்யாப்பழம் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். சாப்பாட்டு இடைவேளைகளில் சாப்பிடுவது சிறந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தியலிங்கத்...

இதன்போது, கட்சியின் செயலாளரின் பொறுப்பற்ற தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் கட்சியின் கூட்டுப் பொறுப்பு உருக்குலைக்கப்பட்டதாகவும், அதனை விசாரணை செய்யுமாறு கோரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனால் குற்றப்பத்திரிகை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. குறித்த குற்றப்பத்திரிகையின் பிரதியைக் கூட்டத்திற்கு வருகைதந்த அனைவருக்கும் சிவமோகன் வழங்கியிருந்தார்.

இந்நிலையில் சுமந்திரனுக்கும் அதனை வழங்கமுற்பட்டபோது அவர் அதனைப் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார்.

குறித்த குற்றப்பத்திரிகையில், கட்சி மாநாட்டுக்கு முன்னர் ஆலோசனைக் கூட்டம் நடத்தாமை, சுகவீனம் எனக்கூறிப் பொதுக்குழுக் கூட்டத்திற்கு வராமை, யாப்பிற்கு முரணாகத் தேர்தல் நியமனக்குழுவை நியமித்தமை, கட்சி உருக்குலையக் காரணமாக இருந்தமை, முல்லைத்தீவு மாவட்டக்குழுவின் ஆலோசனை இன்றித் தேர்தல் நியமனங்களை வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த சிவமோகன்,

தோற்றவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் கேட்கக்கூடாது என்று சொன்னவர் யார். அப்படி ஒரு முடிவை கட்சி எடுக்கவில்லை. கட்சி எடுக்காத முடிவை கட்சியின் பேச்சாளர் என்ற போர்வையில் உட்புகுத்தக்கூடாது.

முஸ்லிம்களை புலிகள் இனச் சுத்திகரிப்புச் செய்தார்கள் என்ற அவரது கருத்து தமிழரசுக் கட்சிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. அது கட்சி எடுத்த முடிவா இல்லையே. போரை நீங்கள் ஏற்கவில்லை. நீங்கள் கொழும்பில் இருந்தீர்கள். நாங்கள் இந்த மண்ணில் இருந்தோம். அதை ஏற்பதா? இல்லையா? என்று நாங்களே தீர்மானிக்க வேண்டும். அதை நீங்கள் சொல்லத்தேவையில்லை.

தேசியப்பட்டியல் ஆசனத்தை வன்னிக்குக் கொடுக்க வேண்டும் என்றால் அது இரண்டாவது விருப்பு வாக்கை எடுத்தவருக்கே கொடுக்க வேண்டும் என்றார். (ந-7,250)

## தேசியப்பட்டியல்...

ஈரப்பெரியகுளத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது கடந்த தேர்தலில் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்கும் விடயம் தொடர்பாக நீண்ட விவாதம் இடம்பெற்றது.

விவாதங்களின் பின்னர் குறித்த தேசியப் பட்டியல் ஆசனத்தை ஏற்கெனவே வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த மருத்துவர் ப.சத்தியலிங்கத்துக்கு வழங்குவதற்கு அரசியல் குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## தேசிய மக்கள்...

வன்னித் தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ரத்னாயக்க ஹெட்டிகே உபாலி சமரசிங்க உள்ளடங்கலாக 18 பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. (ந-7)

## பாராளுமன்றக்...

ஈரப்பெரியகுளத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கட்சியின் பேச்சாளர் பதவி தொடர்பாகப் பாராளுமன்ற முதலாவது அமர்வின் பின்னர் தீர்மானிக்கப்படவுள்ளதாக சிறீதரன் இதன்போது தெரிவித்தார். (ந-7)

## ஹெரோயினுடன்...

ருந்தனர்.

இதன்போது சந்தேகத்துக்கிடமான முறையில் செயற்பட்ட இளைஞன் ஒருவரை சோதனையிட்டபோது அவரது உடைமையில் இருந்து 120 மில்லிக்கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த இளைஞனைக் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,33)

## கள்வர்களைப்...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி காணப்படுகின்றது.

எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாம் பல பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் நிறைவேற்று அதிகாரமுடைய மற்றும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடைய அதிகாரத்துடன் கூடிய பாரளுமன்றம் உள்ள ஒரு நாட்டில் எதிர்த்தரப்பாகச் செயற்படுவது பாரிய சவாலாகும்.

அந்தச் சவாலை ஏற்றுக்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். இன்று இந்த நாட்டின் ஜனாதிபதிக்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. எமது நாடு வங்குரோத்து நிலையில் இருந்து இன்னும் மீளவில்லை. மக்கள் மூன்று வேளை உணவு உண்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

பொருட்களின் விலை அதிகரிப்பு, எரிபொருள் எரிவாயு விலை இவற்றைக் கருத்திற் கொண்டு இந்த நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரம் வழங்கத் தீர்மானித்தனர். மக்களின் அந்தத் தீர்மானத்தினை நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.

ஆனால் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு.

நாட்டினதும் மக்களினதும் எதிர்காலம், நாட்டின் பொருளாதாரம் என அனைத்து விடயங்களும் அதில் தங்கியுள்ளது. நாம் அதனை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். அதேபோல் மற்றுமொரு எதிர்ப்பார்ப்பு மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

அதாவது கள்வர்களைப் பிடிப்பதாகவும் ஊழல்வாதிகளைக் கைது செய்வதாகவும் தேர்தல் மேடைகளில் கூறியே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. எனவே அவர்கள் கள்வர்களைப் பிடிப்பதனையும் ஊழல்வாதிகளுக்கு தண்டனை வழங்குவதனையும் மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். அரசாங்கம் கள்வர்களைப் பிடிப்பதற்கும் ஊழல்வாதிகளைக் கைது செய்வதற்கும் முன்னெடுக்கும் செயற்பாட்டிற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவே உள்ளோம் என்றார். (ந-7)

## இன்று பதவி...

சர்களைக் கொண்ட அமைச்சரவை அமைக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பார்வையற்ற...

றோர் சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியலில் சுகத் வசந்த டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை பார்வையற்ற பட்டதாரிகள் சபையின் தலைவர் சுகத் வசந்த டி சில்வா, தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் மூலம் உத்தியோகபூர்வமாக பாராளுமன்றத்தில் பதவியேற்கவுள்ளார். (ந-7)

மஹஜன சம்பத
திகதி 2024.11.17
சீட்டிழுப்பு இலக்கம் 5658
G 9 9 6 1 3 5
அத சம்பத G 6 1 3 5
சீட்டிழுப்பு இலக்கம் 233
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.11.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1688
I 04 07 52 63 I
Double Chance 00338

மெகா பவர்
திகதி 17/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2006
P 24 07 20 34 72
010813

லக்கி 7 VIP
திகதி 2024.11.17
சீட்டிழுப்பு இலக்கம் 0484
V 8 4 1 4 9 0 V

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3900
சீட்டிழுப்பு திகதி 17.11.2024
Y 07 13 34 77
Y 141374

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.17
சீட்டிழுப்பு இலக்கம் 967
கன்னி 07 31 37 54 கன்னி
002671 36

உத்தியோகபூர்வ முடிவுகள்
17.11.2024 வெற்றி வாரம் 366
C 3 1 3 3 5 0
67294
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,682,764.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2632
சீட்டிழுப்பு திகதி 2024.11.17 தினம் ஞாயிற்றுக்கிழமை
37 39 42 75 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,954,619.20

சனிதா
திகதி 17.11.2024 வெற்றி வாரம் 4793
17 40 44 55 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,490,424.00
ரூ. 100,000/- 09435

சசிரி
வெற்றி வாரம் 559
17.11.2024 ஞாயிற்றுக்கிழமை
03 17 23
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4344
சீட்டிழுப்பு திகதி 17.11.2024 தினம் ஞாயிற்றுக்கிழமை
35 44 47 57 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,837,768.00
106729

கப்றுக
L 23 40 43 61 74
1808
17.11.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.555,586,297.20

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2458
சீட்டிழுப்பு திகதி : 2024.11.17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,817,744.80
15 54 59 76 P
457633

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 18 நிலப்பரப்பு
காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்
1 பரப்பின் விலை 15 இலட்சம் ரூபாய் [ 15 00 000/= ]

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற்வீதி 250m தூரம்
- நன்னீர் ஊற்று, செம்மண் நிலம், நல்ல சூழல்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 - மாலை 6.00 வரை

(2453)

**077 468 3354, 077 288 0152, 076 739 0413**

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1606)

**076 825 7716** (ஆகாஸ்)

## நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

**காயத்திரி திருமண சேவை**
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக
ரூபி விலாஸ்

(2455)

**075 353 1367, 077 844 9861**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

சகல நாடுகளுக்கும்
மிகக் குறைந்த கட்டணம்
11 kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK 1400/= France 2300/=
Germany 2100/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 208, Galle Road, Colombo 06.
(543) T.P - 077 755 4528

## வேலையாள் தேவை

பிரபல்ய யாழ்ப்பாண உணவகம் ஒன்றிற்கு காலை, மதிய உணவுகள் தயார் செய்வதற்கு தங்கி நின்று சமைப்பதற்கு ஆள் தேவை. தங்குமிடம், உணவு வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(2455)

**077 844 9861**

**குறைந்த செலவில் அனுபவமிக்க வழிகாட்டியுடன்**

தென் இந்தியா + காசி + சீரடி யாத்திரை
ஆரம்பம் - 05.12.2024 மார்கழிமாதம்
DECEMBER முதல் வாரத்தில் ஆரம்பமாகும்

- தென் இந்தியா - 15 நாட்கள்
- காசி - 5 நாட்கள்
- சீரடி - 5 நாட்கள்

(2430)

யாத்திரையில் 10 பேர் மட்டுமே அழைத்துச் செல்லப்படுவர். மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும். **077 083 3339**

## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள். (553)

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
48/= ~~80/=~~

**077 780 8030**

## மணமகள் தேவை

யாழ். இந்து, 1984, சுவாதி நட்சத்திரத்தில் பிறந்த தற்போது பிரான்ஸில் வசிக்கும் மணமகனிற்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(2454)

**077 597 1757**

**V2 VISA SERVICES**
**கனடா**
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1607)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் சுப்பர்மார்க்கட்டுக்கு வேலையாட்கள் தேவை.

- காசாளர் - கணினி தெரிந்தவர்கள் (பெண்கள்)
- பொதி செய்பவர்கள் - பெண்கள்

T.T.R.Supermarket
85,87, Rakka Road, Jaffna.
(2457)

**077 355 1631**


# மரண அறிவித்தல்



பிறப்பு
16 - 07 - 1934

இறப்பு
16 - 11 - 2024

## இரத்தினம் ஞானம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் ஞானம் அவர்கள் 16.11.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா, குணரத்தினம், தங்கம்மா, அன்னம்மா, சிவரத்தினம், இரத்தினம், செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலாநிதி (ஓய்வுநிலை உப அதிபர் - கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெயக்குமார்(கொழும்பு), சாந்தகுமார்(லண்டன்), சிவநிதி(கொழும்பு), கருணசீலன்(சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுந்தரேசன், வசந்திதேவி, வாசுகி, ரவீந்திரன்(மாருதி மணிஎக்சேஞ்), தர்மஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் விபீசாந், பிரசாந்(பவன்), தயானந்தி, நிரோஷானந், நிருசங்கர், காயத்திரி, வர்ஷா, ருக்ஷி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.11.2024 இன்று திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்
077 634 8948

(2449)

# மரண அறிவித்தல்



மண்ணில்
1959 - 12 - 13

விண்ணில்
2024 - 11 - 16

## திருமதி இராசமலர் கெங்காதரன்

யாழ். ஏழாலையினைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமலர் கெங்காதரன் அவர்கள் 16.11.2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - திருப்பதி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கெங்காதரன் (ஓய்வு பெற்ற மண் பரிசோதகர் - நீர்ப்பாசனத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் சபீதன் (அவுஸ்திரேலியா), பிரதீபா (கணக்காளர்), சாமினி (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் அச்சுதன் (விரிவுரையாளர் - NIE), உஷா (அவுஸ்திரேலியா), ரமேஷ் (பொறியியலாளர் - R.D.A) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிலானி, ஆதீஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தங்கராஜா (லண்டன்), நித்தியராஜா (கனடா), ரதிகலா (லண்டன்), யசோதா (கனடா), ரகுராஜா (சட்டத்தரணி), வசந்தி(கணக்காளர் - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பேரின்பநாயகம், பாலச்சந்திரன் மற்றும் புஸ்பராணி (கனடா), கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை 19.11.2024 செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

23,M.S வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்

தகவல்:
குடும்பத்தினர்.
074 0878 010

(2452)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.